Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 28 சனிக்கிழமை (13.09.2014) பக்கங்கள் 20 | ஓசை – 347

அற்புதன் அச்சகம்


அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## சர்வதேச கண்காணிப்பிலேயே அரசுடனான பேச்சு சாத்தியம்

### ஜனாதிபதியின் அழைப்புக்கு சம்பந்தன் பதில்



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரசுடன் பேசுவதாயின் சர்வதேச மத்தியஸ்தம் மற்றும் காலவரையறையுடனான நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுடன் பேச்சுக்களை நடாத்த நாம் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்து தற்போது பல்வேறுபட்ட கருத்துக்கள் உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளன.

இந்த நிலையில், அரசாங்கத்துடன் சில நிபந்தனைகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த

19 ஆம் பக்கம் பார்க்க

## சுனாமியால் பாதித்த மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மக்களின் தேவைகள் இனம் காணப்படுவது மட்டுமன்றி அவற்றுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்படும் பட்சத்திலேயே மக்களுக்கான சேவைகளை முழுமைப்படுத்த முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கட்டைக்காட்டுப் பகுதி மக்களுடன் நேற்று இடம்பெற்ற

19 ஆம் பக்கம் பார்க்க



# அரசியல் யாப்பை மீறுகிறதா வடக்கு மாகாண சபை

## ஆராய அடுத்த வாரம் கொழும்பில் மாநாடு



(கொழும்பு)

வடக்கு மாகாண சபை நிர்வாகம் நாட்டின் அரசியல் யாப்பை மீறும் வகையில் செயற்பட்டு வருகிறதா என்பது தொடர்பாக அடுத்த வாரம் கொழும்பில் விரிவாக ஆராயப்படவுள்ளதாக அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுச்செயலாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அண்மையில் வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து ஆராய்ந்து தமது நிலைப்பாட்டை வெளியிட உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானங்கள் தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழு ஆராய உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணை நடத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்குழு இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமெனக் கோரி வடமாகாண சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் என்ற போதிலும் தனித்து கருத்து வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் சாசனத்தை எந்தவொரு மாகாணசபையும் மீற முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாணசபை உள்ளிட்ட நாட்டின் அனைத்து மாகாண சபைகளும் அரசியல் சாசனத்திற்கு அமைவாகவே செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

## பாப்பரசரின் விஜயம் அரசியலுக்கு இடமில்லை

### பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

பாப்பரசர் பிரான்ஸிஸின் இலங்கைக்கான விஜயத்தில் அரசியல் நுழைய அனுமதிக்க வேண்டாம் என்று இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் மல்கம் ரஞ்சித் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அடுத்த ஜனவரியில் பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து இலங்கையின் கத்தோலிக்கத் திருச்சபையால் நேற்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அங்கு செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.

பாப்பரசரின் விஜயத்துக்கான இலட்சினை ஒன்றும் திருச்சபையால் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.

அங்கு உரையாற்றிய பேராயர் மல்கம் ரஞ்சித், பாப்பரசர் ஜனவரி 13 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்வார் என்றும் அவருக்கு அரசாங்க மரியாதையுடன் வரவேற்பு வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

பாப்பரசரின் விஜயத்தின் போது தேர்தல் பிரசாரம் எதுவும் நடக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு தாம் அரசாங்கத்தைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## தங்கநகை கொள்ளை பின்னணி என்ன?

### கசிகிறது திடுக்கிடும் தகவல்

(யாழ்ப்பாணம்)

விடுமுறைக் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வரும் சிலர் தமது தங்கநகைகள் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாக பொய்யான முறைப்பாடுகளை பொலிஸ் நிலையங்களில் செய்தமை இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் யாழ்ப்பாணத்தில் 200 பவுண் நகைகள் களவு போவதென கூறுவது, வெளிநாட்டில் இன்சூரன்ஸ் செய்வதற்காக அவ்வாறு பொய்யான முறைப்பாடுகள் பதிவு செய்கின்றனர். இவ்வாறு செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென யாழ். பிரதேச

19 ஆம் பக்கம் பார்க்க

## மண்கும்பான் கடற்கரையில் இளைஞர் சடலம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் கடற்கரையில் இளைஞன் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது. இச்சடலம் நேற்று மாலை அங்கிருந்து மீட்கப்பட்டது.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க இளைஞனின் இந்தச் சடலம் நேற்று இரவு வரை அடையாளம் காணப்படவில்லை. கையில் பச்சை குத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் பச்சை நிற உள்ளாடை காணப்படுகிறது. (25)

## இந்திய புலனாய்வு அதிகாரிகள் விரைவில் கொழும்புக்கு

### சூடுபிடிக்கிறது உளவாளி கைது விவகாரம்

(கொழும்பு)

இந்தியாவில் உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை பிரஜையொருவர் கைதுசெய்யப்பட்ட பின்னணியில் இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரக அதிகாரிகள், இலங்கையிலுள்ள பயங்கரவாத எதிர்ப்பு அதிகாரிகளை சந்திப்பதற்காக கொழும்பு வரவுள்ளனர்.

இதற்கான அனுமதி கோரி

19 ஆம் பக்கம் பார்க்க

## கொள்ளையர் குழு கிளிநொச்சியில் கைது

(கிளிநொச்சி)

புனர்வாழ்வு-பயிற்சிகளை பெறாத விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் வழிநடத்திய கொள்ளைக் குழுவைச் சேர்ந்த 5 பேரை கிளிநொச்சியில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க







வலி.மேற்கு பிரதேச செயலக அலுவலர்கள் கடந்த 11 ஆம் திகதி சில மணி நேரங்களை சிவபூமி முதியோர் இல்லத்தில் கழித்தனர். அங்கு தங்கியிருக்கும் முதியவர்களுடனான அனுபவப் பகிர்வுக்காகவும், ஆற்றுப்படுத்துதலுக்காகவும் இந்த நிகழ்வு பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

மூத்த பிரஜை ஒருவருக்கு வலி.மேற்கு பிரதேச செயலர் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், இல்லத் தலைவர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் அங்கு தங்கியிருக்கும் பழுத்த ஊடகவியல் ஜாம்பவான் கோபாலரத்தினம் (கோபு அல்லது எஸ்.எம்.ஜி) உட்பட அனைவரும் அமர்ந்திருந்து மதிய உணவு அருந்துவதையும் காணலாம். (க)

# பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பு; கடந்த வாரம் 240 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் பிரிவில் கடந்த வாரம் பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் நீதிமன்றப் பிடியாணை என்பவற்றின் கீழ் 240 பேர் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாக யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விமல சேன தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில் அடித்துக் காயப்படுத்திய சம்பந்தமாக 36 பேரும், அனுமதியற்று மது விற்பனை செய்த 27 பேரும், சந்தேகத்தின் பேரில் 25 பேரும், பிடியாணையின் கீழ் 59 பேரும், பொது இடங்களில் மது அருந்திய 37 பேரும் உள்ளடங்கலாக 240 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தூர். (பா)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3800)


# ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களிடையே ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

ஓவியப் போட்டியின் போது மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்களை உள்ளடக்கிய ஓவியக் கண்காட்சி எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.00 மணி வரையும் இக்கண்காட்சி நடைபெறும்.

குறித்த ஆக்கங்களை பாடசாலை மாணவர்கள் பார்வையிடவும், எதிர்காலத்தில் கூட்டுறவு தொடர்பான இத்தகைய ஆக்கங்களை உருவாக்குவதில் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டவும் ஏதுவாக தங்கள் பாடசாலை மாணவர்கள் இக் கண்காட்சியைப் பார்வையிட உரிய ஒத்துழைப்புக்களை வழங்கி உதவுமாறு பாடசாலை அதிபர்களிடம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை கோரியுள்ளது.

# புற்று நோயாளர்களுக்கான முக்கிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இதுவரை காலமும் இயங்கி வந்த புற்று நோய்க்கான கிளினிக்குகள் இனிமேல் யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாது.

இந்தக் கிளினிக்குகள் யாவும் தெல்லிப்பளை பாதை புற்று நோய் வைத்தியசாலையில் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை நடைபெற்று வந்த டாக்டர் கிருஷாந்தி ராஜசூரியரின் கிளினிக் ஒவ்வொரு வியாழக்கிழமையும், சனிக்கிழமையும் நடைபெற்று வந்த டாக்டர் கவிதா இந்திரநாத்தின் கிளினிக் ஒவ்வொரு புதன்கிழமையும் நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளினிக் வர வேண்டியவர்கள் எதிர்வரும் 18 ஆம். திகதி வியாழக்கிமையும், எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை கிளினிக் வர வேண்டிவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமையும் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விளக்கம் தேவைப்படின் 0212059290 எனும் இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளுமாறும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# 4 பிள்ளைகளின் தந்தை தூக்கில் சடலமாக மீட்பு

காரைநகரில் தூக்கில் தொங்கிய நிலையில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காரைநகர் முல்லைப்பிளவைச் சேர்ந்த கருணாநிதி கருணாகரன் (வயது-31) என்பவரே வீட்டில் வெளிப்புறத்தில் உள்ள கூரையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# 12 தண்டவாளங்கள் திருடிய சந்தேக நபர் கைது

(யாழ்ப்பணம்)

கடந்த வாரம் ஆனைக்கோட்டைப் பகுதியில் 12 தண்டவாளங்களைத் திருடி வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாக யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விமல சேன தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டு நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1091 | திகதி 11.09.2014

வெற்றி எண்கள்: 01 17 22 41 | ஆங்கில எழுத்து: M

ஜக்பொட் பரிசு ரூ. 3,85,44,400/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,85,44,400/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 265 | 1,000/= | ரூ. 2,65,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 512 | 1,000/= | ரூ. 5,12,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12127 | 60/= | ரூ. 7,27,620/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6473 | 40/= | ரூ. 2,58,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 159791 | 20/= | ரூ. 31,95,820/= |
| ஆங்கில எழுத்து | 23122 | 20/= | ரூ. 4,62,440/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,21,800/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 38,857,260/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.09.15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333546/7

(C/3797)




# வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : கி. ரிஷி
முகவரி : தோணிக்கல், வவுனியா

அகவை 7 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# அண்ணா சனசமூக நிலையத்தை திறக்குமாறு மக்கள் கோரிக்கை

மானிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கட்டுடை அண்ணா சனசமூக நிலையம் பூட்டிய நிலையில் காணப்படுவதால் பத்திரிகைகளை பார்வையிடமுடியாதுள்ளதாகவும் இதனால் தகவல்களை பெறமுடியாத நிலை காணப்படுவதாகவும் இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் பூட்டப்பட்ட இச் சனசமூகநிலையம் யுத்தம் நிறைவடைந்து நீண்ட காலமாகியும் இதுவரை திறக்கப்படாத நிலையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டும் மக்கள் இச் சனசமூக நிலையம் திறக்கப்பட்டால் தாம் நன்மையடையலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் 50 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் இக்குடும்பங்களின் பிள்ளைகளில் க.பொ.த.உயர்தரப்பரீட்சை எழுதவுள்ள மாணவர்களும் கல்வி கற்று வருகின்ற நிலையில் வெளித்தகவல்களைப் பெறுவதற்கு பத்திரிகைகளைப் பார்க்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இச்சனசமூக நிலையத்தைத் திறக்குமாறு உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை திறக்கப்படவில்லை என சுட்டிக்காட்டும் மக்கள் இச்சனசமூக நிலையத்தை திறக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (140)

## பொன்விழா

அல்வாய் பாரதிதாஸன் சனசமூக நிலையத்தின் பொன்விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாரதிதாஸன் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் கே.நடராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி. ஜெயராணி பரமோதயன், வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் பொன் விழா மலர் வெளியீடு, பரிசளிப்பு கௌரவிப்பு நிகழ்வு என்பனவும் இடம் பெறவுள்ளன. பொன் விழா மலரின் வெளியீட்டுரையை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ வழங்கவுள்ளார்.

# பாலசிங்கத்தின் ஞாபகார்த்தமாக நிலக்ஷிகாவுக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் எஸ்.வி.பாலசிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் செல்வி. நிலக்ஷிகா திருக்குமரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2013 இல் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றமையை முன்னிட்டே எஸ்.வி.பாலசிங்கம் ஞாபகார்த்த பரிசில் செல்வி.நிலக்ஷிகாவுக்கு வழங்கப்பட்டதாக கல்லூரி முதல்வர் வண.டி. எஸ்.சொலமன் அறிவித்துள்ளார்.

இதேவேளை 2013 இல் டானியல் புலவர் ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஜதீஸ்குமார் ஆதீத்தன் (பௌதீகவிஞ்ஞானம்), நிலக்ஷிகா திருக்குமரன் (உயிரியல் விஞ்ஞானம்), சிந்துஜா ஆனந்தகுமார் (வர்த்தகம்), துரைசாமி கிருபாலன் (கலை), ஆகியோருக்கு சிறந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கப்பட்டது. (92)

# வாழ்வாதார உதவிகள்



(வவுனியா)

வவுனியா பிரதேசசெயலகத்தில் வவுனியா மடுக்குளத்தைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. திட்டங்களுக்கான நிதியுதவிகள் ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையுடன் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு வவுனியா பிரதேசசெயலர் உதயராச்ா தலைமையில் நடைபெற்றது. இதில் 5 குடும்பங்களுக்கு விவசாயம் செய்வதற்கான நிதி உதவியும் மற்றைய குடும்பங்களுக்கு ஆடு, கோழி வளர்ப்புத் திட்டங்களுக்கான நிதிஉதவிகளும் வழங்கப்பட்டன. (70)

# விக்ரோரியா கல்லூரியின் இளைப்பாறிய அதிபருக்கு மணிவிழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் - விக்ரோரியா கல்லூரியில் புகழ் பூத்த அதிபராக கடமையாற்றி இளைப்பாறிய அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜகுருக்கள் ஸ்ரீகாந்தனின் மகத்தான சேவையைப் பாராட்டி மணிவிழா நடாத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை புதிய அதிபர் திருமதி சத்தியகுமாரி சிவகுமார் மேற்கொண்டுள்ளார். பிரம்மஸ்ரீ வரதராஜகுருக்கள் ஸ்ரீகாந்தன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்து கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பணியாற்றி நற்சேவை புரிந்து பலரது பாராட்டுக்களை தன்னகத்தே பெற்றவர். இவ்வாறான பன்முக சேவையாளனுக்கு மணிவிழா நடாத்த முன்வந்துள்ளனர். (92)

# கூட்டமைப்பிடம் உள்ள தீர்வுத்திட்ட வரைவு என்ன?... ஈ-மெயில் யோசனைகள் ஆராயப்பட்டு ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டதா?



வடபுலத்தான் எழுதுவது...

மோடியின் அழுத்தத்தை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தோட பேச முன்வந்திருக்கெல்லோ!

ஆனாலும் இராசவரோதயம் சம்பந்தனும் எம்.ஏ. சுமந்திரனும் பேச்சுத் தொடர்பாக அரசாங்கத்துக்கு காலக்கெடு விதிச்சிருக்கிறதையும் அறிஞ்சிருப்பியள்.

சும்மா வளவளா எண்டு றப்பர் மாதிரிப் பேச்சுகள் இழுபடாமல் இருக்கிறதுக்கு ஒரு கால அட்டவணையும் நிகழ்ச்சிகள் தொடர்பாக ஒரு திட்டமிடலும் இருக்கிறது நல்லதுதான்.

ஆனால், இதெல்லாம் நிபந்தனை, கட்டளை எண்ட மாதிரியே இருக்குமெண்டால்... தொடக்கத்திலேயே இழுபறிகள் தொடங்கிவிடும்.

இதெல்லாத்துக்கும் முதல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு விசயத்தைப் பற்றி தெளிவுபடுத்த வேணும்.

இந்தப் பேச்சுவார்த்தையில எதைப்பற்றிப் பேசப்போகிறம் எண்டு இதுவரையில ஏதாவது தீர்மானிக்கப்பட்டிருக்குதா...?

அப்படித் தீர்மானிக்கப்பட்டிருந்தால் அந்தத் திட்ட வரைவு என்ன?

முன்வைக்கப்படவிருக்கும் தீர்வுத்திட்டம் தொடர்பாக தமிழ்ச் சமூகத்தின் மனநிலையும் ஒப்புதலும் என்ன?

இதைப்பற்றியெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, அதின்ரை ஆதரவாளர்களோ இதுவரையில வாய்திறந்ததேயில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில நான் இன்னும் சில கேள்விகளைக் கேட்கிறன் –

தீர்வுத்திட்டம் தொடர்பாக தமிழ் மக்களின்ரை (கவனிக்கவும் – தமிழ்பேசும் மக்களினுடையதல்ல) அபிப்பிராயத்தைக் கூட்டமைப்பு எதிர்பார்க்குது. அப்பிடி ஆராவது தீர்வு யோசினைகளை முன்வைக்கிறதாக இருந்தால்.... அச்சுவேலியில இருக்கிற கந்தையாண்ணையின்ரை.... மன்னிக்கோணும்.... இப்பிடித்தான் ஏதோ ஒரு விலாசத்தையும் ஒரு மின்னஞ்சல் முகவரியையும் மூண்டு நாலு மாசங்களுக்கு முதல் குடுத்திருந்தார் சூனாப் பினா எண்ட 'மண்டைக்காய்' சுரேஸ் பிரேமச்சந்திரன்.

இந்த அறிவிப்பை அடுத்து, இதுவரையில எத்தினை பேரிட்ட இருந்து அப்பிடியான தீர்வு யோசினைகள் வந்திருக்கு?

அப்பிடி ஏதாவது யோசினைகள் வந்திருந்தால் அந்த யோசினைகளில என்னென்ன விசயங்கள் எல்லாம் எழுதப்பட்டிருக்கு?

இந்த யோசினைகளைப் பற்றி கூட்டமைப்பு இதுவரையில ஏதாவது ஆராஞ்சிருக்கா?

இப்பிடி யோசினைகளை முன்வைச்சிருக்கிற ஆக்களைத் தொடர்பு கொண்டு ஏதாவது அவர்களிடம் பேசியிருக்கா?

இதெல்லாம் நடந்த மாதிரியும் தெரியேல்ல. நடக்கிற மாதிரியும் தெரியேல்ல.

அப்பிடியெண்டால்... தீர்வுத்திட்டம் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் கூட்டமைப்பு என்னமாதிரியான ஐடியாவோட இருக்கு?

உண்மையென்னெண்டால், இந்தப் பேச்சுவார்த்தையில கூட்டமைப்பும் விசுவாசத்தோட கலந்து கொள்ளத் தயாராக இல்லை.

ஏதோ மோடி மாமா கொஞ்சம் இறுக்கமாகச் சொல்லிப்போட்டார், அவரை மேவேலாது, முறிக்கேலாது எண்டதால ஏதோ வில்லங்கத்துக்காக இந்தப் பேச்சுகளில கூட்டமைப்பு கலந்து கொள்ளுது.

அதுக்கு மேல உண்மையாகவோ விசுவாசமாகவோ அது இந்தப் பேச்சுகளில ஈடுபட விரும்பேல்ல எண்டது உறுதியிலும் உறுதி.

இதை கூட்டமைப்பு மறுக்கேலாது. அதின்ரை மாபெரும் பேச்சாளரான மண்டைக்காய்கூட இதை மறுக்கேலாது.

அப்பிடித்தான் பேசுவதாக இருந்தால், அது முஸ்லிம்களோட முதற்கட்டமாகப் பேசியிருக்க வேணும்.

முஸ்லிம்களோட போசாமல் அரசாங்கத்தோட பேச்சுவார்த்தை நடத்தவே ஏலாது.

இதைப்பற்றி மண்டைக்காய் வாய்திறப்பாரா? ஞானோதயம் மன்னிக்கவும் இராசவரோதயம் சம்பந்தன் வாய்திறப்பரா?

நாம் துன்பப்படுவது நம் செயல்களின் காரணமாகத்தான். அதற்குக் கடவுள் பொறுப்பல்ல. - விவேகானந்தர்

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாழ்வை நரகமாக்க வேண்டாம்!

நமது சூழலிலோ நமது நாட்டிலோ மட்டும் என்றில்லை; மனிதர்கள் வாழும் இடங்களில் இருந்தெல்லாம் கொலை, பாலியல் வல்லுறவு, சிறுவர்மீது துஷ்பிரயோகம், போதைப் பாவனை வன்செயல் என்று குரூரமான செய்திகள் இப்போது அதிகம் கிடைக்கின்றன. இளைய மனங்களின் திரிபும் விரக்தியும் எதிர்காலம் குறித்து கவலை கொள்ள வைக்கின்றன.

புறச்சூழலின் குரூரத்தினால் சிதைக்கப்பட்டு, மனித மனங்களிலிருந்து அன்பு, கருணை, சக மனிதர்களிடமான நேசம், வாழ்வின் மீதான நம்பிக்கை என்பன இப்படித் தொலைந்து போவது குறித்துப் பதற்றமே உண்டாகிறது.

அன்பை உதறிவிட்டு மனதினுள் ஆழமான காழ்ப்புணர்வுகளை நிரப்பிக் கொள்கிறோமோ என்று அச்சப்படாமலிருக்க முடியவில்லை. அன்பையும் அடுத்தவர்களைச் சகிப்பதையும் தொலைத்துவிட்ட பின்னால் வாழ்வில் நம்பிக்கை கொள்ள மிச்சம் என்ன இருக்க முடியும்?

வாழ்க்கையின் மீது பிடிப்பும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையும்தானே இளமையின் சொத்து! தங்களின் ஈகோவுக்கு எந்த அடியும் விழாதபடி மாற்றங்களைத் தேர்ந்தெடுப்பதென்பது இளைஞர்களால் மட்டுமே முடிந்த காரியம் அல்லவா? எவ்வளவோ சாதிக்கவும், கற்றுக் கொள்ளவும் துடிப்புடனிருக்கும் இளைய பருவம் சிதைய அனுமதிப்பது இந்த சமூகத்தினுடைய குறைபாடுதான்.

விரக்தியும் வெறுப்பும் விரோதமுமான சூழலையே உருவாக்கித் தந்துகொண்டிருக்கும் சமூகப் பெரியவர்கள், ஊடகங்கள், மதப் பெரியவர்கள் எல்லோருமேதான் குற்றவாளிகள். இந்த சமூகம்தான் குற்றங்கள் செய்யவும் தூண்டி அதற்குத் தண்டனைகளையும் தந்து கொண்டிருக்கிறது.

வெறுப்புணர்வுகளை வளர்த்துவிட்டுக் கொண்டிருப்பதுதான் இளைஞர்களைத் தவறான வழிகளுக்குத் தள்ளுகிறது. கஷ்டங்களைச் சொல்லி யார் யாரிடமோ அனுதாபம் வேண்டி அழுது கொண்டிருப்பதில் லாபமில்லை. நம்முடைய பிரச்சினைகளை நாம் சமாளிக்க விரும்பினால் நிறைவான அளவில் நம்பிக்கையும் உறுதியுமே தேவையாக இருக்கிறது.

வாழ்க்கை நமக்கு மட்டும்தான் வழிகளை அடைத்து வைத்திருக்கிறது என்பது மாதிரியான சோர்வில் நாம் பின்தங்கிவிட வேண்டாம். நம்பிக்கையும் உறுதியோடும் சாதித்தவர்களை நமது இளையோருக்குத் திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்துவோம்.

இசைமேதை பீதோவன் சாகாவரம் பெற்ற ராகங்களை செவிடாக இருந்த நிலையில்தான் உருவாக்கினார். கவிஞர் மில்டன் 'இழந்த சொர்க்கம்' காவியத்தை கண்பார்வையற்ற நிலையில்தான் எழுதி முடித்தார்.

அலெக்ஸாண்டர் போப் இருக்கையை விட்டு எழுந்து நடக்க முடியாதவர்; ஆங்கில இலக்கியத்தில் மிகப்பெரிய சாதனைகளை அவர் படைத்தார்.

ஜூலியஸ் சீஸர் காக்காய்வலிப்பு நோயினால் அவதிப்பட்டவர். காக்காய்வலிப்பு வரப்போகிறது என்ற உணர்ச்சி ஏற்பட்ட உடனேயே, போரை நடத்துவதற்கான யோசனைகளைச் சொல்லிவிட்டு, சுயநினைவு இழந்த நிலையில் படுத்து விடுவாராம். சுயநினைவு வந்தவுடன் எதுவுமே நடக்காதது போல தளபதி நிலையில் ஆணைகளைப் பிறப்பிப்பாராம்.

ஹெலன் கெல்லர் பேச முடியாதவர்; பார்வையற்றவர்; காது கேளாதவர்! யாருடைய அனுதாபத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை அவர். மற்றவர்களுக்கு உதவுவதில் தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்று உறுதிபூண்டார். மனிதர்களுக்கு முன்மாதிரியானார்.

அனுதாபத்தை எதிர்பார்த்து அரற்றிக் கொண்டிருப்பதும், அடுத்தவர் மீது அசூயை கொள்வதும் மனதில் வன்முறை நிறைப்பதும், மற்றவர்களினதும் நமதும் வாழ்வை வீம்புகளால் நரகமாக்கிக் கொள்வதற்கும் அல்ல நாம் பிறந்திருப்பது! வாழ்க்கை ஒரு கொடை! நாம் வாழவே பிறந்தோம்!

- ஆசிரியர்

# நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிப்பு அர்ப்பணிப்புகளை செய்ய வேண்டும்

### - கூறுகின்றார் அரசியலமைப்பு நிபுணர் ஜயம்பதி விக்கிரமரத்ன -

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்ற வேண்டுமாயின பலர் அர்ப்பணிப்புகளை செய்ய வேண்டும் எனவும் சில சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகள் தமது அடையாளங்களையும் இழக்க நேரிடும் எனவும் அரசியல் அமைப்பு தொடர்பான நிபுணரான கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அந்தக் காலத்தில் கை சின்னத்தை தவிர வேறு சின்னத்தில போட்டியிடுவதில்லை எனக் கூறி தோல்வியடைந்த சிலர் இருந்தனர்.

யானைச் சின்னத்தை தவிர வேறு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதில்லை எனக் கூறி தோல்வியடையும் நபர்கள் இன்றும் உள்ளனர்.

1993 ஆம் ஆண்டளவில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த சிலர், கை அல்ல காலையாவது சின்னமாக வைத்து வெல்ல வேண்டும் என எண்ணினர்.

இதனடிப்படையில் 1994 ஆம ஆண்டு மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது. இதனால், கடந்த காலத்தை எண்ணி அழுது கொண்டிருக்க வேண்டாம்.

முன்னோக்கிப் பாருங்கள், எதிர்காலத்தை பாருங்கள் என நான் யோசனை கூறுகிறேன்.

இது சிரமமான வேலை எனினும் எம்மால் செய்ய முடியும். இம்முறை தவறினால், எதிர்கால சந்ததி எம்மை சபிக்கும் எனவும் ஜயம்பதி விக்ரமரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்கள் வழங்கிய தீர்ப்புகளை மதிக்க வேண்டும் உச்சநீதிமன்றம்

### - சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து -

(கொழும்பு)

மக்களின் கருத்துக்களுக்கு உச்ச நீதிமன்றம் மதிப்பளிக்க வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

மூன்றாம் தவணைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென தெரிவித்துள்ளது.

மூன்றாம் தவணைக்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து உச்ச நீதிமன்றில் சட்ட விளக்கம் அளிக்கும் போது, மக்களின் கருத்து கவனத்திற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக தேர்தலில் போட்டியிட முடியாது என்பதே தமது நிலைப்பாடு என சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது அரசியல் சாசனத்திற்கு புறம்பானது என தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ஜே.வி.பி. சட்ட ஆலோசகர் சுனில் வட்டகல உள்ளிட்ட பலரும் இதேவிதமான கருத்தையே வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உயர்தர வினாத்தாள் திருத்தம் 24 பாடசாலைகளுக்கு விடுமுறை

க.பொ.த. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் இரண்டாம் கட்ட மதிப்பிடல் பணிக்காக தெரிவு செய்யப்பட்ட 7 பாடசாலைகளுக்கு இம்மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை மேலும் 17 பாடசாலைகளுக்கு பகுதியளவு விடுமுறை வழங்கப்படவுள்ளன. மூடப்பட்ட குறித்த பாடசாலைகள் அனைத்தும் 27 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கொழும்பு ஆனந்தா கல்லூரி, டி.எஸ். சேனாநாயக்க கல்லூரி, குருணாகல லக்தாஸ் வித்தியாலயம், காலி உஸ்வதுன ஹசனா வித்தியாலயம், சுதர்மா வித்தியாலயம், மாரராஹூல வித்தியாலயம், ப/விஸாக்கா உயர் மகளிர் பாடசாலை என்பன முழுமையாகவும் கொ/லும்பினி வித்தியாலயம், களு/வேலபுர மகாவித்தியாலயம், கம்/ரத்னாவலி பாலிக்கா வித்தியாலயம், நீர்/ ஹரிஸ்சந்திர வித்தியாலயம், குரு/ வயம்ப மகா வித்தியாலயம், குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயம், கே-/புனித சூசைக்கல்லூரி, இர/சீவலி மத்திய வித்தியாலயம், க/ சுவர்ணமாலி பாலிக்கா வித்தியாலயம், க/ உயர் மகளிர் கல்லூரி, க/ சிரி ஈரியகம புஷ்பதான மாதிரி பாடசாலை, ப/ சீவலி மகாவித்தியாலயம், அநு/ புனித சூசையப்பர் கல்லூரி, மட்/ புனித சிசிலியா கல்லூரி, யா/ யாழ் மத்திய கல்லூரி, கல்/ கார்மல் பாத்திமா மகளிர் கல்லூரி என்பன பகுதியளவும் மூடப்பட்டிருக்கும் என கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசுடன் இணைந்து செயற்படின் வடக்கை அபிவிருத்தி செய்யலாம்

### - முதல்வர் விக்கிக்கு முஸாம்மில் அறிவுரை -

(கொழும்பு)

வடக்கை அபிவிருத்தி செய்ய வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமென கொழும்பு மேயர் ஏ.ஜே.எம். முஸாம்மில் தெரிவித்துள்ளார்.

வடக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என அவர குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டதன் மூலம் கொழும்பில் பாரியளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமது அரசியல் எதிர்காலத்திற்காக கொழும்பின் அபிவிருத்தியை அடகு வைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான முரண்பாடுகளை களைய வேறும் வழிகளை விக்னேஸ்வரன் தேடிக் கொள்ள வேண்டுமெனவும், அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இரத்தினபுரம் நீர்த்தாங்கி கட்டுமானப்பணிகள் பூர்த்தி

கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் அமைக்கப்பட்டு வந்த நீர்த்தாங்கியின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிளிநொச்சி மாவட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் நேற்று தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் ஜப்பான் நாட்டின 1,620 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் இரத்தினபுரம், பரந்தன் ஆகிய பகுதிகளில் இரண்டு நீர்த்தாங்கிகள் அமைக்கும் பணிகள் 2014 ஏப்ரல் மாதம் முன்னெடுக்கப்பட்டன.


1000 கனமீற்றர் கொள்ளளவை கொண்டதாக அமைக்கப்படும் இந்த இரண்டு நீர்த்தாங்கிகளும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 40 ஆயிரம் குடும்பங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவுள்ளது.

இந்த நீர்த்தாங்கிகளுக்கான நீர் இரணைமடு குளத்திலிருந்து பெறப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு மக்களுக்கு குடிநீராக வழங்கப்படும்.

இரத்தினபுரம் பகுதியின் நீர்த்தாங்கியின் கட்டுமானப் பணிகள் தற்போது பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து, அந்த நீர்த்தாங்கிக்கான குழாய்கள் பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இரண்டு நீர்த்தாங்கிகளின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்து இவ்வருட இறுதிக்குள் நீர் விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.





மருதனார்மடத்தில் அமைந்துள்ள விழிப்புலனற்றோர் அமைப்பான வாழ்வக நிறுவனத்தின் ஸ்தாபகர் கலாநிதி செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் வாழ்வக தலைவர் ஆ.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அன்னையின் நினைவுச சிலையை திறந்துவைப்பதையும் வாழ்வகத்தின் உறுப்பினர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம். (48)

# இணக்க அரசியல் ஊடாகவே அபிவிருத்தியை மேம்படுத்தலாம்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்க அரசியல் ஊடாகவே அபிவிருத்தியை துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

கொடிகாமம் தெற்கு தவசிக்குளம் பகுதி மக்களது சமூக நலன்களை மேம்படுத்துவதற்காக அப்பகுதி மக்களின் ஏற்பாட்டில் மக்களுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கினால் அவை நியாயமான முறையில் பெற்றுக் கொடுப்பவர்களாக மக்கள் பிரதிநிதியாக இருக்க வேண்டும். தமிழர்களது இனப்பிரச்சினையை



தீர்ப்பதற்கு உலகின் எப்பாகத்திற்கு ஓடினாலும் தீர்வு கண்டுவிட முடியாது. எமது நாட்டின் அரசுடன் பேசித்தான் தமிழ் மக்களாகிய நாங்கள் வலுவான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நீங்கள் காணும் அபிவிருத்திகள் அனைத்தும் இணக்கமான அரசியலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவு செய்து கொண்டமையாலேயே செய்ய முடிகின்றது.

எதற்கெடுத்தாலும் இல்லையென்ற நிலைமை எமது இனத்திடமிருந்து அகற்றப்படவேண்டும். தொடர்ந்தும் கூட்டமைப்பினர் கூறிவரும் தேசிய வாதத்தைக் கேட்டு அவர்கள் பின்னால் செல்வதாக இருந்தால், இன்னொரு தடவை பாரிய அழிவுகளை எமது இனம் கண்டு கொள்ள வேண்டி வரும்.

வடக்கு மாகாண சபைக்கு வரும் நிதிகள் இருப்பில் இருக்கின்றன. அவற்றைசரிவரக் கையாளாததன் காரணமாக வருட முடிவுடன் நிதிகள் மீளச் செல்கின்றன். இதனால் தமிழர்களது அபிவிருத்தியும் உறக்க நிலையைக் காணவேண்டியுள்ளது என்றார். இந்தச் சந்திப்பில் ஈபிடிபியின் தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ், சமுர்த்தி உத்தியோகத்தர் செந்தூரன், கட்சி உறுப்பினர்களான மெடிஸ்கே, மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காணி ஆணையாளர் திணைக்களத்துக்கு போதனாசிரியர்கள் 13 பேர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு போதனாசிரியர்கள் 13 பேருக்கான நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நேற்றுமுன்தினம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கிவைத்துள்ளார்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றுவதற்காவே பொதுச்சேவை ஆணைக்குழுவினால் 2013 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் மூலமாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் வழங்கி வைத்துள்ளார். இந்நியமனம் வழங்கும் நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (பா)

# ஆசிரிய ஆலோசகர்களின் நியமனம் கல்வி அமைச்சு நடவடிக்கை

(வலிகாமம்)


இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம், இலங்கையின் கல்வி வலயங்கள் தோறும் சேவையாற்றிவரும், ஆசிரிய ஆலோசகர்களை நிரந்தர சேவைக்குள் உள்வாங்கும் நடவடிக்கைகளை மேல் மாகாணக் கல்வி அமைச்சு மேற்கொண்டு வருவதாக ஆசிரிய ஆலோசகர்கள் தெரிவிக்கின்றனர்.

கல்வி வலயங்கள் ஆசிரிய ஆலோசகர்களுக்கு விண்ணப்பப்படிவங்களை விநியோகித்து, அவர்களது விபரங்களைச் சேகரித்து வருகிறன்றன.

இந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் விரைவில் இவர்களுக்கான நிரந்தர சேவைக்கான நியமனக்கடிதங்கள் அனுப்பப்படவுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

எனினும் இது தொடர்பான சுற்றறிக்கை வட மாகாணக் கல்வியமைச்சுக்கு வந்திருந்த போதும், இதுவரை ஆசிரிய ஆலோசகர்களை நிரந்தர சேவைக்குள் உள்வாங்கும் எந்த நடவடிக்கையினையும் வடமாகாண கல்வியமைச்சு மேற்கொள்ளவில்லை எனவும் ஆசிரிய ஆலோசகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (06)

# மாணவர்களுக்கு காலணிகள் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் வட்டு மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட 80 மாணவர்களுக்கு காலணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேற்படி 80,000 ரூபா பெறுமதியான காலணிகள் காலணிகள் நேற்றுமுன்தினம் பாடசாலையில் வைத்து வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கப் பொருளாளர் க.ரகுமானால் மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வட்டு மத்திய கல்லூரி சமூகத்துடன் இணைந்து வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரத்துக்கு பங்கமான குப்பைகளை அகற்றகோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் குப்பைகள் தேங்கியிருப்பதனால் சுகாதாரத்திற்கு பாதகமான நிலை ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் மைதானத்திற்கும் இடைப்பட்ட ஒழுங்கையில் போடப்பட்டுள்ள குப்பைகள் நீண்ட காலமாக அகற்றப்படாமல் உள்ளன, இதனால் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அருகில் குப்பைகள் தேங்குவதால் அண்மையில் பெய்த மழையின் காரணமாக டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

அத்துடன் பாடசாலையின் பிரதான உணவகத்தின் அருகிலேயே மேற்படி குப்பைகள் தேங்கியுள்ளமையால் உணவகத்திற்கும் சுகாதாரத்திற்கும் பங்கமான நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இவற்றை மாநகரசபையினரும், சுகாதாரப்பரிசோதகரும் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கல்விச்சமூகம் கோரியுள்ளது. (48)

# வடக்கு மாகாணசபை பிரேரணைகளால் குழப்பமடையமாட்டாது அரசாங்கம்

## - அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



இலங்கையின் அரசமைப்பை மீறி வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்படும் எந்தவொரு பிரேரணையும் செல்லுபடியாகாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள் மாகாணசபைக்கு வெளியில் செல்லுபடியற்ற ஒரு விடயமாகவே காணப்படுகின்றன." - இவ்வாறு ஆளும்கட்சியின் பிரதம கொறடாவும் அமைசசருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வடக்கு மாகாணசபையில் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்பாடுகள் தொடரபில் அரசு குழப்பமடையவில்லை. கூட்டமைப்பு இவ்வாறு செய்றபடுவது புது விடயமுமல்ல என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்படும் பிரேரணைகளுக்கு ஆளுநர் அங்கீகாரம் வழங்கினால் தான் அவை செல்லுபடியாகும்.

ஆனால், அரசமைப்பை மீறும் வகையில் நிறைவேற்றப்படும் எந்தப் பிரேரணைக்கும் ஆளுநர் அங்கீகாரம் வழங்கமாட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்து வடக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கடந்த புதன்கிழமை பிரேரணை நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - வடக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்வது முறையற்ற செயற்பாடாகும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையாளருக்கு இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டால் இங்கு என்ன நடக்கின்றது என்ற உண்மை நிலையைக் காண முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தேவையெனின் உள்நாட்டில் செயற்படுத்தப்படுகின்ற ஆணைக்குழுவுக்கு வந்து சாட்சி வழங்கமுடியும் எனத் தெரிவித்தார்.

# கண்மூடிய அரசியலை நடத்துகிறார் மங்கள

## சஜித் எம்.பி. விசனம்



பிரேமதாஸாக்களும் ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கைக்கு என்ன செய்தது என்பதை மங்கள சமரவீர அறிந்திருக்கவில்லை. இது அவரின் கண்மூடிய அரசியலையே காட்டுகிறது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது மங்கள சமரவீர, சஜித் பிரேமதாஸ பிரதித்தலைவராகி அவரின் பணிகளை சிறந்த முறையில் காட்டவேண்டும் என்று சவால் விடுத்திருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு எதிராக மங்கள சமரவீரவே பாரிய பிரசாரங்களை முன்னெடுத்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவை மிஸ்டர் பீன் என்றும் ரணில்ட பே (ரணிலுக்கு முடியாது) என்ற சுவரொட்டிகளுக்கு மங்கள சமரவீரவே சொந்தக்காரர் என்று சஜித் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் மங்கள சமரவீர தற்போது ஒரு அரசியல் அகதி என்றும் சஜித் தெரிவித்துள்ளார்.

# தமிழ்ப்பிரிவினைவாத ஆபத்து சர்வதேசத்திற்கு விளக்கப்படும்

## என்கிறார் உதயகம்மன்பில

(கொழும்பு)

தமிழ்ப் பிரிவினைவாதத்தின் ஆபத்துக்கள் குறித்து உலகிற்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பிலான பிழையான பிரசாரங்களை பொறுப்பு வாய்ந்த உலக நாடுகளின் முன்னிலையில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

நிலையான அபிவிருத்திக்கான பிராந்திய அரசாங்கங்களின் வலையமைப்பு என்ற அமைப்பின் இணைத் தலைவராக என்னைத் தெரிவு செய்துள்ளார்கள்.

இந்தப் பதவியை பயன்படுத்தி இலங்கைக்கு எதிரான பிரசாரங்களை முறியடிக்க நடவடிக்கை எடுப்பேன்.

பதவியை பெற்றுக் கொள்ள வழிகாட்டிய ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட வர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

காலநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த அமைப்பு நடவடிக்கை எடுத்து வருவதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவிற்கு செல்கிறார் ஜனாதிபதி

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ இந்த மாதம் 21ஆம் திகதி அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நியூயோர்க்கில் இந்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வகையில் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த அமர்வின் போது ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ விசேட உரை ஒன்றையும் நிகழ்த்தவுள்ளார். அதேநேரம் இந்த நிகழ்வுக்கு புறம்பாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு நாட்டு தலைவர்களதும் நிகழ்ச்சி நிரல்களில் இந்த சந்திப்புக்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இராணுவ ஆட்சியை முழுமைப்படுத்தவே மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி

## அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் இராணுவ ஆட்சியை முழுமையாக்குவதற்காகவே அரசு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களையும் இணைக்கவே பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் புதிய மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி என்ற செயற்றிட்டத்தை மேற்கொண்டு வருகிறது." - என குற்றம் சுமத்தியுள்ளது அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். அத்துடன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் இந்த பயிற்சித் திட்டத்தால் மாணவர்கள் தங்கள் கல்வியிலோ அல்லது வாழ்க்கையிலோ எந்தப் பயனையும் - முன்னேற்றத்தையும் அடைவதில்லை எனவும் விசனம் தெரிவித்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மருதானை சீ.எஸ்.ஆர். மண்டபத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அதன் ஏற்பாட்டாளர் நஜீத் இந்திக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தச் செயற்றிட்டத்துக்கு சுமார் 20 கோடி ரூபாவை அரசு வருடம்தோறும் செலவிடுகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் வதிவிடமின்மை, புலமைப் பரிசில் தொகை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு கேட்டுத் தொடர்ச்சியாக போராடிய போதிலும் இதுவரை எந்தவொரு தீர்வையும் அரசு வழங்கவில்லை.

ஆனால் மாணவர்களுக்கு எவ்விதத்திலும் பயன்தராத விடயங்களுக்காக நாட்டின் அப்பாவி மக்களின் பணத்தை அரசு வீணடிக்கின்றது.

நான்கு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பயிற்சி செயற்றிட்டத்தில் இதுவரை 3 மாணவர்கள் இறந்துள்ளனர். அதுமட்டுமல்லாது 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சியின்போது பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர். இந்தப் பயிற்சிப் பட்டறை மூலம் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களுக்கு உயிர் அச்சம் காணப்படுகின்றது.

எனவே, இந்த தலைமைத்துவப் பயிற்சியை அரசு நிறுத்தி பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்" எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மாளிகை பணியாளருக்கு மூன்று வருட சம்பளம் 1340மில்லியன்

ஜனாதிபதி மாளிகையில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளமாக கடந்த மூன்று வருடத்தில் 1340மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர்.தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க நாடாளுமன்றில் எழுப்பிய கேள்வியொன்றுக்கும் பதிலளிக்கையிலேயே அமைச்சர்.தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளாவது

ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்ற 1488ஊழியர்களுக்கு அனுமதி உள்ள போதிலும் தற்போது 1348பேரே பணியாற்றுகின்றனர்.

இதில் 96இலட்சம் ரூபா விசேட கொடுப்பனவும், போக்குவரவு கொடுப்பனவாக 2637 ரூபாவாகவும் எரிபொருள் கொடுப்பனவாக 3282 ரூபாவாகவும் வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மின் கட்டணம் விரைவில் குறையும்

(கொழும்பு)

மின் கட்டணங்களில் குறைப்பு ஏற்படுத்தப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி. பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இறுதியான மின் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. இதன் மூலம் மின் உற்பத்திக்கான செலவு குறைவடையும் எனவே பொது மக்களும் நன்மையடையும் வகையில் மின் கட்டணத்தை குறைக்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

# படையதிகாரிகளென சந்தேகம் சிறை அதிகாரிகளுக்கு விசா மறுப்பு

(கொழும்பு)

படையதிகாரிகள் என்ற சந்தேகத்தினால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கனேடிய அரசாங்கம் விசா வழங்க மறுத்துள்ளது.

கனடாவில் நடைபெறவுள்ள சர்வதேச சிறைச்சாலைகள் சம்மேளனமொன்றுக்கு விஜயம் செய்ய ஆயத்தமாகியிருந்த சிறைச்சாலை திணைக்களத்தின் இரண்டு உயர் அதிகாரிகளுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது.

இந்த இருவரும் படைத் தரப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், இலங்கைக்கான கனேடிய தூதரகம் விசா வழங்க மறுத்துள்ளது.

கைத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் திஸ்ஸ ஜயதிஸ்ஸ மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரி எமில் ரஞ்சன் ஆகிய அதிகாரிகளுக்கே இவ்வாறு விசா மறுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிறைச்சாலைகள் ஒன்றியத்தினால் வருடாந்தம் அபா என்னும் மாநாடு நடத்தப்பட்டு வருகின்றது.

இம்முறை இந்த மாநாடு கனடாவில் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமானது. மாநாடு ஆறு நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்காக இலங்கையின் சார்பில் குறித்த இரண்டு அதிகாரிகளின் பெயர்களும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தன.

இலங்கை அரசாங்கம் போர்க் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் இதனால் படையதிகாரிகளுக்கு விசா வழங்க முடியாது எனவும் கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே சிறைச்சாலை திணைக்களத்தின் இரண்டு உயர் அதிகாரிகளினதும் விசாக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

படையதிகாரிகள் என நினைத்து குறித்த அதிகாரிகளுக்கு, கனடா விசா வழங்கவில்லை என சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திரரட்ன பல்லேகம தெரிவித்துள்ளார்.

# சேதனபசளை பாவனை விவசாயிகளுக்கு பயிற்சி



கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள், சேதன பசளைகளை பயன்படுத்தி விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு பயிற்சிகளும் உபகரணங்களும் வழங்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அ.செல்வராஜா நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

மத்திய விவசாய அமைச்சால மாவட்ட செயலகத்தினூடாக அனுப்பப்பட்ட நிதி மூலம் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகள் இரசாயன பசளைகளைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் மண்வளம் மற்றும் நீர்வளம் என்பன பாதிக்கப்படுகின்றன.

இதனைத் தடுக்கும் நோக்கில், சேதன பசளைகளை உற்பத்தியாக்கி விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பயிற்சியும் அதற்கான உபகரணங்களும் என்பன விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக முரசுமோட்டை பகுதியைச் சேர்ந்த 400 விவசாயிகளுக்கு கடந்த புதன்கிழமை உபகரணங்கள், பயிற்சிகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த 600 விவசாயிகளுக்கு உபகரணங்கள் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந் நடவடிக்கை எதிர்வரும் நாட்களில் கிளிநொச்சியின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை முத்தமிழ் சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

பதிவு செய்யப்பட்ட இலங்கை முத்தமிழ் சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது . முத்தமிழ் சங்கத்தின் புதிய தலைவராக நடராசா ஜனகதீபன் ,செயலாளராக தவராசா தர்சன் பொருளாளராக தேவேந்திரன் மகேஸ்வரி ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுடன் உபதலைவராக வேகாவனம் பிரதீபன் ,உபசெயலாளராக தவராசா நிரோஷன்,ஒருங்கிணைப்பாளராக பரமேஸ்வரன் கார்தீபன் ,ஊடக இணைப்பாளராக திருப்பதி பாஸ்கரன் கொள்கை பரப்பு செயலாளராக சிவராஜா பவதர்ஷன் , நிர்வாக உறுப்பினர்களாக கணேசலிங்கம் சுரேஷ்காந்த் , தங்கராசா, செந்தூரன், ஸ்ரீகரன், சரண் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் . வவுனியா வேப்பங்குளத்தை தளமாக கொண்டுள்ள முத்தமிழ் சங்கம் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் தமிழ் மற்றும் சமய கலாசார வளர்ச்சிக்காக முழுநேரமாக பணியாற்ற உள்ளதாகவும், ஏனைய சங்கங்களினால் புறக்கணிக்கப்பட்ட கலை கலாசார ஆர்வலர்கள், அரசியல் காரணங்களுக்காக புறம்தள்ளப்பட்ட திறமைசாலிகள் இலைமறை காய்களாக கிராமங்களில் வாழ்கின்ற கலை வல்லுநர்கள் அனைவரையும் அரவணைத்துக் கொண்டு பயணிப்பதுமே புதிய நிர்வாகத்தின் இலக்கு எனவும் அச் சங்கத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# படை அதிகாரிகளுக்கு ஆங்கிலப்பயிற்சி நிறைவு



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியின் ஏற்பாட்டில் நடைபெற்ற படை அதிகாரிகளுக்கான ஆங்கில பயிற்சி வகுப்பில சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பலாலி படைத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதியம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை இராணுவப் பொலிஸாரின் கட்டளை அதிகாரி மேஜர்ஜெனரல் நந்தன உடவத்த கலந்து கொண்டதுடன் யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதய பேரெரா மற்றும் யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள படைகளின் கட்டளை அதிகாரிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் விமானப்படை வட மாகாண கட்டளை அதிகாரி கடற்படையின் வட மாகாண கட்டளை அதிகாரி பிரிட்டிஸ் கல்லூரியின் யாழ். மாவட்ட இணைப்பாளர்கள் உட்பட மற்றும் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு சித்தி அடைந்த அலுவலர்களின் பெற்றோர்கள் சகோதரர்கள் மனைவி, பிள்ளைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து ஆங்கில பயிற்சி நெறியில் சித்தி அடைந்த அலுவலர்களின் ஆங்கில பாடல்கள் 'வெனிஸ் நனர வியாபாரி' என்னும் நாடகம் என்பன இடம் பெற்றன.

# மாமனாரை தாக்கிய மருமகன்மார் ஆட்பிணையில் விடுதலை

(கரணவாய்)

நெல்லியடி குடவத்தை துன்னாலைப்பகுதியில் மாமனாரைத் தாக்கிய மருமகன்மார் இருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தால் ஆட்பி ணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் வசிக்கும் புஸ்பன் என்ற மாமனாரை அவரது இரு மருமகன்மாரும் பொல்லால் தாக்கிவிட்டு தலைமறைவாகி விட்டனர்.

இந்நிலையில் நெல்லியடி பொலிஸார் தேடுதலை மேற்கொண்டு இருவரையும் கைது செய்து பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது இவர்களை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டதுடன் இது தொடர்பான வழககு எதிர்வரும் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (18)

# நகரஎழுச்சித்திட்டங்களின் உட்கட்டுமானங்கள் ஆராய்வு

வடக்கு மாகாணத்தில் நகரஎழுச்சி திட்டங்களின் கீழ் கடந்த மூன்று ஆண்டு காலத்தில் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டுமானங்களை உலகவங்கி குழுவினர் (World Bank) ஆராய்ந்து வருகின்றனர்.

வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிலும் புறநெகும திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களையே ஒவ்வொன்றாக ஆராய்ந்து வருவதுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட இடங்களுக்கும் சென்று பார்வை யிட்டும் வருகின்றனர்.

இச் செயற்பாடுகளில் உள்ளூராட்சி சபைத் தலைவர், செயலாளர்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

அடுத்தவாரம் மன்னார். மாவட்ட புறநெகும திட்டங்களின் முன் னேற்றங்கள் ஆராயப்படவுள்ளன. (92)

# துணுக்காய் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 9மணிக்கு சிரமதானப்பணிகள் ஆரம்பமான நிலையில் துணுக்காய் பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமான சிரமதான பணி மூலம் பல்வேறு இடங்கள் துப்பரவாக்கப்பட்டன.

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் துணுக்காய் பிரதேச சபையுடன் இணைந்து இராணுவத்தினர், மல்லாவி பொலிஸார், அரசதிணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டு இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (140)

# டெங்குவாரத்தினை முன்னிட்டு பாண்டியந்தாழ்வில் சிரமதானப்பணி

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணம் பாண்டியந்தாழ்வு வீதிகளிலுள்ள வடிகால்களை துப்பரவு செய்யும் நோக்கில் சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

யாழ்.மாநகரசபை ஊழியர்களும் படைப்பிரிவினரும் இணைந்து இந்த சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## முரசின் இன்றைய பலன்



(13.09.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் ஆவணி மாதம் 28 ஆம் திகதி.
பஞ்சமி / சித்தாமிர்தம்.
பரணி நட்சத்திரம் பின்னிரவு 12.42 வரை பின் கார்த்திகை
இராகு காலம 09.03 - 10.33 வரை. சுபநேரம 03.08 - 04.38வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | டெங்குநுளம்புகள் பெருகக் கூடிய வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்தமையினால் அபராதம் விதித்தல். நீண்ட நாட்கள் நிலவிய பகைமையைக் கைவிட்டு எதிரி உறவுக்கு கைகொடுத்தல். |
| ரிஷபம் | சகோதர உதவியினால் புதியமுயற்சி ஆரம்பிக்கும் எண்ணம் தக்கவைத்தல். குடும்பமுன்னேற்றம் கருதி ஒய்வுக்குப்பின்னரும் மீள் நியமனம் பெற விரும்புதல். |
| மிதுனம் | விவாகம் நிறைவேற சுபசெய்தி தரகரினால் எடுத்து வரப்படல். தொழில் மற்றும் பணி முன்னேற்றமடைய விழிப்புடன் செயலாற்றல். |
| கடகம் | பெற்றோர் பிள்ளைகள் மத்தியில் புரிந்துணர்வின்மையினால கவின்நிலை பாதிக்கப்படல். தொல்லை கொடுத்தவர் வெளிநாடு சென்றதால் அச்சம் நீங்கி ஆனந்தப்படல். |
| சிம்மம் | சுபகாரியமொன்று எதிர்பாராது ஏற்பட்டவேளை நிகழ்வினை கொண்டாட சேமிப்பில் கைவைத்தல். பராமுகமாக இருக்கும் சகோதர உறவினை எண்ணிக்கலங்குதல். |
| கன்னி | வெளியூர் பயணத்திற்கென கட்டிய பணத்தை முகவரியிடமிருந்து மீளவும் பெறுதல். தொழில் நிமித்தம் பந்த பாச உறவுகளை கைவிட்டுப் பிரிந்து விடல். |
| துலாம் | சொத்துப்பங்கீடு ஒரு தலைப்பட்சமாக அமைகின்ற வேளை முரண்பாடு தோன்றுதல். சகோதரர் மத்தியில் ஏற்பட்ட பிணக்கினைத் தீர்க்க பிதா மத்தியத்தம் வகித்தல். |
| விருச்சிகம் | சர்ப்பக்கிரகங்களின் கோசரம் நன்மைப்பலன்களைத் தக்க வைக்கும் நிலையில் இருப்பது அதிர்ஷ்டமளிக்கும் |
| தனுசு | வீட்டுத்திட்டச் செயற்பாட்டில் பாகுபாடு இருந்ததைக் கண்டு ரகளை ஏற்படல். நோய்குணமடைய மருத்துவ மூலிகைகளைப் பாவிக்க முயலல். |
| மகரம் | பிதாமற்றும் சகோதரரின் நோய் நிலை குணமடைவதை எண்ணி பதகளிப்பு மறைதல் எதிர்பாராது ஏற்பட்ட இடமாற்றக்கடிதம் கண்டு துயர் மிகுதல். |
| கும்பம் | ஆயுதங்களுடன் வேலை செய்கையில் காயங்கள் ஏற்பட்டு பணியை நிறுத்துதல். கொடுத்த கடனைப் பெறச் சென்ற வேளை அவமானமும் பயமுறுத்தலும் நேர்ந்து விடல். |
| மீனம் | நேர்முகத் தேர்வு/ பரீட்சைசித்தியினால்/ அரசியல் பணியாளர்களினால் வேலை வசதி கிடைத்தல். |

# ஆசியா வலைப்பந்து; அரையிறுதியில் இலங்கை



(சிங்கப்பூர்)

ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் தோற்கடிக்கப்படாத அணியாக அரையிறுதிச் சுற்றுக்கு இலங்கை முன்னேறியுள்ளது.

சிங்கப்பூரில் நடைபெறும் இந்தப் போட்டியில் பி குழுவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணியும் மலேஷிய அணியும் நேற்று முன்தினம் பலப்பரீட்சை நடாத்தியிருந்தன.

போட்டியின் முதல் கால் பகுதியில் 17 - 14 என்ற கோல்கள் கணக்கில் மலேஷிய அணி முன்னிலை பெற்றிருந்தது. எனினும் இரண்டாவது கால்பாதியில் திறமையை வெளிப்படுத்திய இலங்கை அணி 33 - 31 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது.

மூன்றாவது கால் பகுதியில் 49 - 48 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலை பெற்ற இலங்கை அணி இறுதி பகுதியில் 66 - 62 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியை தனதாக்கியது. இதன்பிரகாரம் அரையிறுதிப் போட்டியில் கொங்ஹொங் அணியுடன் இலங்கை அணி இன்று பலப்பரீட்சை நடாத்தவுள்ளது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சிங்கப்பூர் மற்றும் மலேஷிய அணிகள் விளையாடவுள்ளன.

# 2017 ஆசிய இளைஞர் விளையாட்டு இலங்கையில் நடாத்த அனுமதி

2017ஆம் ஆண்டுக்கான ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை இலங்கையில் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களில் நடாத்துவதற்கான ஒப்புதலை ஆசிய இளைஞர் விளையாட்டு சபைத் தலைவரும் ஆசிய இளைஞர் விளையாட்டுக் காங்கிரஸ் தலைவருமான ஷேய்க் அஹமட் அல் பாஹட் அல் சமஹாஸ் வழங்கியுள்ளார்.

அண்மையில் குவைத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே, இலங்கைக் குழுவினரிடம் இந்த ஒப்புதலை அவர் வழங்கியுள்ளார்.

குவைத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஆசிய இளைஞர் விளையாட்டு 2017 இன் ஏற்பாட்டுக் குழு கூட்டுத் தலைவரும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தலைமையில் இலங்கையிலிருந்து பிரதிநிதிகளாக இலங்கை தேசிய ஒலிம்பி சபைத் தலைவரும் ஏற்பாட்டுக்குழுவின் துணைத்தலைவருமான ஹேமசிறி பெர்னாண்டோ, விளையாட்டமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம, தேசிய ஒலிம்பிக் சபையின் பொதுச் செயலாளர் மக்ஸ்வெல் டி சில்வா, மற்றும் பிரேமா பின்னவல விளையாட்டுத்துறையில் ஜனாதிபதியின் ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டனர். இங்கு கருத்து வெளியிட்ட மத்திய வங்கியின் ஆளுநர் நாட்டில் விளையாட்டுத்துறையினை மேம்படுத்துவதற்காகவும் இந்த ஆசிய விளையாட்டுப் போட்டியை இலங்கையில் நடாத்த ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்கள் அர்ப்பணிப்புக்களை அல் சமஹாஸ்க்கு தெளிவாக எடுத்துரைத்தார். இதற்கு பதிலளிக்கும் முகமாக கருத்து வெளியிட்ட அல் சமஹாஸ் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புக்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்தார். ஏற்பாடுகள், இடம்பெறவுள்ள நிகழ்வுகள் தொடர்பாகவும் இந்நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இது தொடர்பான முன்னறிவிப்பு கூட்டங்கள் கொரியாவில் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் இடம்பெறும்.



# விலகினார் மோர்கல்

(கொல்கத்தா)

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி20 போட்டித் தொடருக்கான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இருந்து, முன்னணி வேகப் பந்துவீச்சாளர் மோர்கல் காயம் காரணமாக விலகியுள்ளார். ஐ.பி.எல். ருவென்ரி-20 உட்பட பல்வேறு நாடுகளில் நடைபெறும் உள்ளூர் ருவென்ரி-20 போட்டித் தொடர்களில் சம்பியன் பட்டம் வென்ற அணிகள் மோதும் சம்பியன்ஸ் லீக் ருவென்ரி20 தொடர், இந்தியாவில் நடைபெறவுள்ளன. தகுதிச் சுற்று ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகவுள்ளன. பிரதான சுற்று 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஹைதராபாத், ராஜிவ் காந்தி சர்வதேச மைதானம் போன்ற இடங்களில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்தில் ஐ.பி.எல். நடப்புச் சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடன் சென்னை சூப்பர் கிங்ஸ் மோதவுள்ளது.

இந்த நிலையில், நைட் ரைடர்ஸ் அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளரான மோர்கல் (தென்னாபிரிக்கா), தோள்பட்டை காயம் காரணமாக விலகுவதாக அறிவித்துள்ளார். மொத்தம் 15 பேர் அடங்கிய அணியில், அவருக்குப் பதிலாக விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரர் மன்விந்தர் பிஸ்லா சேர்க்கப்பட்டுள்ளதாக கே.கே.ஆர். அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

# காதலி கொலை வழக்கில் பிஸ்டோரியஸ் குற்றவாளி இல்லை



(டேர்பன்)

காதலியைக் கொலை செய்த வழக்கில், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பிளேட் ரன்னர் ஒஸ்கர் பிஸ்டோரியஸ் குற்றவாளி இல்லை என அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாரா ஒலிம்பிக் சம்பியனான மாற்றுத் திறனாளி பிஸ்டோரியஸின் வீட்டு குளியலறையில், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அவரது காதலி ரீவா ஸ்டீன்கெம்ப், துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் பிணமாகக் கிடந்தார். இந்த வழக்கில் பிஸ்டோரியஸ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

திருடன் என்று நினைத்து துப்பாக்கியால் சுட்டதாகவும், வேண்டுமென்றே கொலை செய்யவில்லை என்றும் விசாரணையின்போது பிஸ்டோரியஸ் தெரிவித்திருந்தார். ஆனால், அரசு தரப்பில் வாதாடிய வழக்குரைஞர், துப்பாக்கிச் சூடு நடப்பதற்கு முன் வாக்குவாதம் நடந்துள்ளதாக வாதிட்டார்.

பிரிட்டோரியா உயர் நீதிமன்றத்தில் நீண்ட நாட்களாக நடைபெற்ற இந்த வழக்கு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின், நீதிபதி தொகோஸ்லி மஸிகா, குற்றம் சாட்டப்பட்டவர் (பிஸ்டோரியஸ்) திட்டமிட்டுக் கொலை செய்தது, சந்தேகத்துக்கு இடமின்றி போதிய ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படவில்லை. இருப்பினும், கொலை செய்யும் நோக்கமின்றி மரணம் விளைவித்தாரா என்பது குறித்து, அடுத்த விசாரணையில் தெரியவரும் எனத் தெரிவித்து, வழக்கைத் தள்ளி வைத்தார்.

இந்தத் தீர்ப்பைக் கேட்டு நீதி மன்றத்தில் இருந்த பிஸ்டோரியஸ் உணர்ச்சிப் பெருக்கில் கண்ணீர் விட்டு அழுதார். அவரது சகோதரி உள்ளிட்ட குடும்பத்தினர் அவரை ஆறுதல் படுத்தினர். அதேநேரத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர், இறுக்கமான முகத்துடன் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறினர்.

பிஸ்டோரியஸ் குற்றவாளி இல்லை என்று வெளியான தீர்ப்பு, தென்னாபிரிக்க சட்ட வல்லுநர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, கொலையுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக பிஸ்டோரியஸ் தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமே யானால் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.




# மும்முரமாக நடைபெறும் பயிற்சியாளர் தெரிவு

(கொழும்பு)

இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கு நிரந்தர பயிற்சியாளர் ஒருவர் இல்லாத நிலையில், தற்போது பயிற்சியாளரைத் தெரிவு செய்யும் போட்டி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இப்பதவிக்கு 17 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததாகவும், இதில் ஒரு உள்நாட்டவரும் 16 வெளிநாட்டவர்களும் உள்ளடங்குவதாகவும் அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

பயிற்சியாளரை தெரிவுசெய்யும் முகமாக நியமிக்கப்பட்ட குழு இறுதியாக வெளியிட்டுள்ள தகவலின்படி, இவர்களில் 8 பேர் தெரிவாகியுள்ளதாக தெரியவருகிறது. இதன் படி இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் சிறந்த துடுப்பாட்ட வீரரும் தற்போது இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் தற்காலிக பயிற்சியாளராகவும் செயற்படும் மாவன் அத்தபத்து மற்றும் தற்கால துடுப்பாட்ட வீரர்களின் துடுப்பாட்ட நுணுக்கங்களில் விசேட அறிவுள்ளவர்களில் சிறந்தவராக திகழ்பவரும் மிடில்செக்ஸ் அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளருமான இங்கிலாந்தின் மார்க் ராம்பிரகாஷ் ஆகிய இருவரும் தெரிவுப் போட்டியில் முன்னிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு அடுத்ததாக எரிக் சிமன்ஸ், மிக்கி ஆர்தர், டேவ் நோஸ்வர்த்தி, ரொபர்ட் வோல்ரர் ஆகிய தென்னாபிரிக்கர்களும் கிறிஸ் அடம்ஸ், ஜொனி லுவிஸ் ஆகிய இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களும் பயிற்சியாளர் தெரிவுப் போட்டிக் களத்தில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் ஒரு வாரத்திற்குள் இவர்களில் ஒருவர் நிரந்தர பயிற்சியாளராக தெரிவாகவுள்ளதாகவும், பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த 1996ஆம் ஆண்டு இலங்கை உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் போது பயிற்சியாளராக கடமை புரிந்தவரும் அவுஸ்ரேலிய நாட்டவருமான டேவ் வட்மோர் இலங்கை தி அணிக்கு பயிற்சியாளராக தெரிவாவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகவும் பயிற்சியாளரை தெரிவு செய்யும் குழு வெளியிட்டுள்ள . செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

# மும்பை அணிக் கப்டனாக நியமிக்கப்பட்டார் போலாட்



சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடருக்கான மும்பை அணியின் கப்டனாக போலாட் நியமிக்கப்பட்டார். சம்பியன்ஸ் லீக் ருவென்டி-20 தொடர், இன்று முதல் வரும் ஒக்ரோபர் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மும்பை அணிக்கு கப்டனாக இருந்தவர் ரோகித் சர்மா, சமீபத்தில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் களத்தடுப்பின் போது, இவரது வலது கை நடுவிரலில் காயம் ஏற்பட்டது. உடனடியாக நாடு திரும்பிய இவர், பெங்களூர் தேசிய கிரிக்கெட் அகாடமியில் மறுவாழ்வு பயிற்சி மேற்கொண்டு வருகிறார். இதனையடுத்து இவர், சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து விலகினார்.

இந்நிலையில் சம்பியன்ஸ் லீக் தொடரில், மும்பை அணியின் கப்டனாக ஹர்பஜன் சிங், லசித் மலிங்க, போலாட் ஆகியோரில் ஒருவருக்கு வாய்ப்பு இருந்தது. முடிவில், மேற்கிந்தியதீவின் போலாட் கப்டனாக நியமிக்கப்பட்டார். இவர், 2009இல் நடந்த முதலாவது சம்பியன்ஸ் லீக் தொடரில் பட்டம் வென்ற டிரினிடாட் அணியின் வெற்றிக்கு முக்கிய பங்குவகித்தவர். தவிர, 2013இல் நடைபெற்ற ஐ.பி.எல்., தொடரில் 29 சிக்சர் விளாசிய இவர், மும்பை அணி முதன்முறையாக கோப்பை வெல்ல உதவினார். இதுவரை மும்பை அணிக்காக (ஐ.பி.எல்., சம்பியன்ஸ் லீக்) 102 போட்டிகளில் பங்கேற்று 1924 ஓட்டங்கள் எடுத்துள்ளார். பந்துவீச்சில் 65 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இது குறித்து மும்பை அணியின் ஆலோசகர் கும்ளே கூறுகையில், சம்பியன்ஸ் லீக் தொடரில் ரோகித் சர்மா இல்லாதமை வருத்தம் அளிக்கிறது. இவர், விரைவில் குணமடைவார் என நம்புகிறோம். இம்முறை கப்டனாக நியமிக்கப்பட்டுள்ள போலாட், அணியை திறமையாக வழிநடத்துவார் என எதிர்பார்க்கிறோம். இவரது அனுபவம், மும்பை அணியின் வெற்றிக்கு கைகொடுக்கும் என்றார்.

# தேசிய மட்ட பெருவிளையாட்டு; இரண்டாம் கட்டம் நாளை ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டியின் இரண்டாம் கட்டம் நாளை யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் நடைபெறவுள்ளது.

பெரு விளையாட்டுப் போட்டிகள் மூன்று கட்டங்களாக நடாத்தப்படவுள்ளன. இதில் முதற் கட்டப் போட்டிகள் கடந்த 5,6,7ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இரண்டாம் கட்டப் போட்டி நாளை முதல் நடைபெறவுள்ளது. இதில் நாளை முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டி கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பாடசாலை ஆகிய மைதானங்களிலும், நாளை முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை ஆண், பெண்களுக்கான கரம் போட்டி யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்திலும், நாளை முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஆண், பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி யாழ். மத்திய கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய மைதானங்களிலும் நடைபெறும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி நாளை முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை வியங்கொட சியனா சர்வதேச கல்லூரி மைதானத்திலும், ஆண், பெண்களுக்கான பளு தூக்கல் போட்டி கொழும்பு அசோக வித்தியாலயம் மற்றும் (ராஜகிரிய - திலிப்பிட்டிய) அரியநாயக்க மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

முதற் கட்டமாக நடைபெற்ற போட்டியில் வட மாகாண பாடசாலை அணிகள் ஒரு தங்கம் உட்பட ஆறு பதக்கங்களை வென்றுள்ளன. இதில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும், ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. அத்துடன் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் பண்டத்தரிப்பு ஜெசிந்த மகாவித்தியாலயம் தங்கப் பதக்கத்தையும், 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை அணி வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பளு தூக்கலில் அசத்தும் சுண்டிக்குளி மகளிர் மங்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்திய பளு தூக்கல் போட்டியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆஷிகா விஜயபாஸ்கர் தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

நிறை அடிப்படையில் நடாத்தப்பட்ட இப்போட்டி கடந்த புதன்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இருபாலாருக்குமிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டியில் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பல வீர,வீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

58 - 63 இற்கு இடைப்பட்ட கிலோ எடைப் பிரிவில் பங்குபற்றிய சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 13 வயது வீராங்கனை ஆஷிகா விஜயபாஸ்கர் 120 கிலோ கிராம் நிறையைத் தூக்கி தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார். அத்துடன் அனைத்து பிரிவுக்குமான சிறந்த வீராங்கனையாகவும் ஆஷிகா தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

இதேவேளை, வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டியில் ஆஷிகா தங்கப் பதக்கம் வென்று தேசியப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளார். 17 வயதிற்குட்பட்ட பிரிவில் பங்குகொண்ட ஆஷிகா 108 கிலோ நிறையைத் தூக்கி தங்கம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பளு தூக்கல் போட்டி நாளை முதல் 16ஆம் திகதி வரை அசோக வித்தியாலயம் மற்றும் ராஜகிரிய - திலிப்பிட்டிய அரியநாயக்க மகாவித்தியாலய மைதானங்களில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வென்று மாகாணத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்ப்பேன் என ஆஷிகா நம்பிக்கை தெரிவித்துள்ளார். (எஸ்.பி.)




# இறுதிப் போட்டியில் ஞானமுருகன்



(உரும்பிராய்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்படும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு மயிலங்காடு ஞானமுருகன் அணி முன்னேறியுள்ளது.

பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக நிதி திரட்டும் வகையில் வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. இதன் காரணமாக ஒரு அணி கோல் அடித்த அதேவேகத்தில் மற்றைய அணியும் பதில் கோல் அடித்து இரசிகர்களைப் பரவசத்தில் ஆழ்த்தின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டி 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டி எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ளது. இதில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# பிரபு சகலதுறையில் ஜொலிப்பு ஞானவைரவர் அபார வெற்றி

(அளவெட்டி)

பிரபுவின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் அளவெட்டி ஞானவைரவர் அணி அபார வெற்றிபெற்றது.

அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் வலி. வடக்கின் சமர் மென்பந்து கிரிக்கெட் தொடர் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் 20 ஓவர்களைக் கொண்டதாகும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் அளவெட்டி மத்தி அணியும் ஞானவைரவர் அணியும் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அளவெட்டி மத்தி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஞானவைரவர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வகிந்தனன், பிரபு ஆகியோர் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரவீண் நான்கு, சுதன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 74 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அளவெட்டி மத்தி அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் காந்தசீலன் 16, சுகந்தன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரணவன் நான்கு, பிரபு மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டித் தொடரின் லீக் ஆட்டங்களில் ஞானவைரவர் அணி இரு போட்டிகளிலும், மல்லாகம் ஆர்.டி.எஸ். அணி ஒரு போட்டியிலும் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மூன்று போட்டிகளில் பங்குபற்றிய அளவெட்டி மத்தி அணி அனைத்திலும் தோல்வியைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# சர்வதேச கால்பந்து சம்மேளனம் இணக்கம்

(கொழும்பு)

இலங்கையில் கால்பந்தாட்ட விளையாட்டை முன்னேற்ற ஒத்துழைப்பு வழங்க உலக கால்பந்தாட்டச் சம்மேளனம் முன்வந்துள்ளது. இதேவேளை விளையாட்டுக் கழகங்களில் குறைபாடுகளை போக்குவதற்காக சம்பளம் பெறும் பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியை உருவாக்கும் விளையாட்டு அமைச்சரின் யோசனைக்கும் உலக கால்பந்தாட்ட சம்மேளனம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளது. இதற்கு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனப் பொதுச் செயலர் ஜெரோம் வெல்கே இணக்கமும் தெரிவித்துள்ளதாக விளையாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

கால்பந்தாட்ட விளையாட்டின் அபிவிருத்தி தொடர்பாக விளையாட்டு அமைச்சு கூடி விரிவாக ஆராயப்பட்டது. சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன பொதுச் செயலர் ஜெரோம் வெல்கே மற்றும் சர்வதேச கால்பந்தாட்ட பிரதானிகள் இலங்கையில் கால்பந்தாட்ட விளையாட்டை முன்னேற்ற தொடர்ந்தும் ஒத்துழைப்பு நல்குவதாகத் தெரிவித்தனர். விளையாட்டு அமைச்சும், கால்பந்தாட்டச் சம்மேளனமும் மேற்கொள்ளும் பணிகளையும் இவர்கள் பாராட்டினர்.

# வென்றது வவுனியா மாவட்டம்

(வவுனியா)

பிறிமா வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டமொன்றில் வவுனியா மாவட்ட அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் திருகோணமலை அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதின. முதலில் ஆடிய திருகோணமலை அணி 43.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அச்சிகான் 44, திவாகரன் 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றுசாந்தன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 219 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வவுனியா மாவட்ட அணி 43.3 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் தனுஸ்வரன் 62, பிரயோதையன் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அச்சிகான் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (12)



# றோயல் முன்னேற்றம்

(கொக்குவில்)

கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு ஊரெழு றோயல் அணி தகுதி பெற்றுள்ளது.

புத்தூர் எவெரஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியும் திக்கம் இளைஞர் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஊரெழு றோயல் அணி கோல் மழை பொழிந்து இரசிகர்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியது. இறுதியில் ஊரெழு றோயல் அணி 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (93)

# ஜே.வி.பி. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

**5**

**- சுப்பராஜன் [வானவில் இதழ்]**

விஜேவீர தனது கட்சியின் சித்தாந்தமாக மார்க்சிஸ - லெனினிஸத்தை ஏற்பதற்குப் பதிலாக சேகுவேராவின் தத்துவங்களையே பின்பற்றினார். அதில் கவர்ச்சி ஏற்படுத்துவதற்காக தானே சேகுவேராவின் தோற்றத்தில் தன்னை உருமாற்றிக்கொண்டார்.

மாஓசேதுங் சிந்தனை மக்கள் யுத்தப்பாதையை வலியுறுத்துவது. சேகுவேரா ஒரு உண்மையான புரட்சிவாதியாக இருந்தபோதும் அவரது பாதை ஓரளவு குட்டி முதலாளித்துவ வீர சாகசச் செயல்களை ஒத்தது.

அதனால்தான் மாஓசேதுங் சிந்தனையைப் பின்பற்றுபவர்களைத் திசைதிருப்புவதற்காக சோவியத் யூனியன் அந்தக் காலகட்டத்தில் சேகுவேராவின் "பொலிவியன் டைரி"யைத் திட்டமிட்டு வெளியிட்டது.



அடுத்ததாக, தொழிலாள வர்க்கமே ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தலைமைச் சக்தி என்பதும், தொழிலாளி - விவசாயி ஐக்கியமே புரட்சியின் அடிப்படை உந்து சக்தி என்பதுமே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலைப்பாடு. ஆனால் ஜே.வி.பி. இளைஞர்களே புரட்சியின் அடிப்படைச் சக்தி என்ற குட்டி முதலாளித்துவச் சித்தாந்தத்தைப் பின்பற்றினார்கள்.

உண்மையில் இளைஞர்கள் எந்தவொரு விடயத்திலும் உற்சாகமான ஒரு சக்தியாகத் திகழுவார்கள் என்ற போதிலும், இளைஞர்கள் என்றொரு தனியான வர்க்கம் இல்லை என்பதை அனைவரும் அறிவர்.

இவற்றைவிட, ஜே.வி.பி. இற்கும் ஐ.தே.க.வுக்கும் இடையிலான தொடர்பும் சந்தேகத்துக்கு உரியது. ஏனெனில் 1970ஆம் ஆண்டு தேர்தலில் சிறீலங்கா - சமசமாஜ - கம்யூனிஸ்ட் கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு உழைத்த ஜே.வி.பி, தேர்தல் முடிந்து ஒரு வருடத்துக்குள்ளாகவே, அரசாங்கம் மக்கள் மத்தியில் எதுவித வெறுப்பையும் சந்தித்திராத சூழலில் . ஒரு ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பித்தது சந்தேகத்துக்கு உரியது.

அத்துடன் 1971ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு கூட்டம் ஒன்றில் பேசிய அன்றைய எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. தலைவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தான் இன்று ஒரு இளைஞனாக இருந்தால் ஜே.வி.பி.யில்தான் இருப்பேன் எனப் பேசியிருந்தார்.

அந்தப் பேச்சை அன்று ஜே.ஆரின் குடும்பப் பத்திரிகையாக இருந்த லேக்ஹவுஸ் நிறுவனத்தின் "டெய்லி நியூஸ்" பத்திரிகை முன்பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்தது. அதே செய்தியை ஜே.வி.பி. கிளர்ச்சியை ஆரம்பிப்பதற்கு மூன்று நாட்கள் முன்னதாக ஏப்ரல் 02ஆம் திகதி "டெய்லி நியூஸ்" மீண்டும் மறுபிரசுரம் செய்தது!

ஒரு பத்திரிகை, அதுவும் வலதுசாரிகளின் ஒரு பத்திரிகை தீவிர இடதுசாரிகள் என்று சொல்லப்படும் ஜே.வி.பி.யைப் புகழ்ந்து இலங்கையின் வலதுசாரிப் பிற்போக்குவாதியும், அமெரிக்க ஏகாதிபத்திய சார்பானவருமான ஜே.ஆரின் பேச்சை சில நாட்களுக்குள் இரண்டு தரம் திரும்பத் திரும்பப் பிரசுரித்ததின் மர்மம் அல்லது நோக்கம் என்ன?

(ஜே.ஆர். 1977இல் ஆட்சிக்கு வந்ததும் விஜேவீரவையும் ஏனைய ஜே.வி.பித் தலைவர்களையும் உடனடியாகச் சிறையிலிருந்து விடுதலை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது)

அதுமாத்திரமில்லாமல் ஜே.வி.பி.யின் 71ஆம் ஆண்டுக் கிளர்ச்சியில் ஐ.தே.க.வுக்கு இன்னொரு வகையிலும் பங்கு இருந்தது.

1965இல் ஐ.தே.க. டட்லி சேனநாயக்க தலைமையில் ஏழு கட்சி ஆட்சி அமைத்த போது, விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கென "விவசாயப்படை" என்ற போர்வையில் ஐ.தே.க.வுக்கு ஒரு குண்டர் படையை அமைத்தது. அதற்குப் பொறுப்பாக முன்னாள் இராணுவக் கப்டனான செனவிரத்ன என்பவரை நியமித்தது.

அந்த அரசில் தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்ததால், தமிழ் பகுதிகளில் அந்தப் படையில் அந்தக் கட்சிகளின் ஆதரவாளர்கள் சேர்க்கப்பட்டனர்.

1970இல் தேர்தல் நடைபெறு வதற்கு முன்பாக அந்தப் படையைக் கலைத்த ஐ.தே.க அரசாங்கம் அதில் இணைந் திருந்த அனைவருக்கும் தலா 500 ரூபா வழங்கி சிங்களப் பகுதிகளில் ஐ.தே.கவுக்கும், தமிழ் பகுதிகளில் தமிழ் காங்கிரசுக்கும் (தமிழரசுக்கட்சி ஆறுமாதங்களுக்கு முன்னர் அரசிலிருந்து விலகியிருந்தது) தேர்தல் வேலை செய்யம்படி ஆலோசனையும் வழங்கி வீட்டுக்கு அனுப்பியது.

ஆனால் நடந்தது என்னவென்றால், ஐ.தே.க ஆதரவாளரான கப்டன் செனவிரத்ன கணிசமான சிங்கள விவசாயப்படை உறுப்பினர்களையும் சேர்த்துக்கொண்டு ஜே.வி.பி.யில் சேர்ந்து கொண்டார். அதில் சேர்ந்துகொண்ட அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

முடிவாகத் தொகுத்துப் பார்த்தால் ஜே.வி.பி. என்னதான் தன்னை ஒரு மார்க்சிசக் கட்சி என்று சொல்லிக் கொண்டாலும், உண்மையில் அது ஒரு சிங்கள தேசியவாத குட்டி முதலாளித்துவக் கட்சி என்பதே உண்மையாகும்.


அதுமாத்திரமல்லாமல் அது முன்னர் சோவியத் திரிபுவாதிகளாலும், ஐ.தே.க். பிற்போக்குவாதிகளாலும் பயன்படுத்தப்பட்ட ஒரு கட்சியுமாகும். அது [illegible]ங் காலத்தில் ஏகாதிபத்தியத்தாலும், மீண்டும் ஐ.தே.க.வினாலும் பயன்படுத்தப்படலாம் என்பதை அதன் பிந்தைய வரலாறும் எடுத்துக் காட்டுகிறது.

இந்த வரலாற்றுப் படிப்பினைகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, ஜே.வி.பி.யை அதற்கு உரிய இடத்தில் வைப்பது ஒவ்வொரு உண்மையான மார்க்சிஸ - லெனினிஸவாதியினதும் கடமையாகும்.

**(தொடரும்)**

# என் இனிய தமிழ் எழுத்தாளர்களே...

**- எழுத்தாளர் இமையம் கட்டுரையிலிருந்து.**



கடந்த 20 ஆண்டுகளில் நம் சமூகம் அடைந்த வளர்ச்சி, பெற்ற முன்னேற்றங்கள், மாற்றங்கள் அளப்பரியது. மனமாற்றம், சிந்தனை மாற்றம் என்பது கற்பனைக்கு எட்டாத அளவுக்கு மாறியிருக்கிறது. உணவில், உடையில், தனிமனித, குடும்ப, சமூக வாழ்வில் பெரிய மாற்றங்கள். நேற்றைய ஒழுக்கங்கள், மதிப்பீடுகள் இன்று கேலிக்குரியவையாக மாறியிருக்கின்றன. நம்முடைய புனிதங்கள் இன்று தெருச்சாணியாகக் கிடக்கின்றன.

தொழில்நுட்பமே வாழ்க்கை. மனிதனுக்காகத் தொழில்நுட்பம் என்பதற்குப் பதிலாக, தொழில்நுட்பத்துக்காக மனிதன், என்றாகி விட்டது. இன்று ஒரு மனிதனால் கைபேசி இல்லாமல் ஒரு நாள் வாழ முடியுமா? ஹலோ என்ற சொல்லை உச்சரிக்காத மனிதர்கள் நாட்டில் இருப்பார்களா? கற்பனை செய்துபார்க்க முடியவில்லை.

தொலைக்காட்சியைப் பார்க்காமல் ஒரு மனிதனால் ஒருநாள் பொழுதைக் கழிக்க முடியுமா? சாத்தியமில்லை. கணினி இல்லாமல், இணையம் இல்லாமல், மின்னஞ்சல், குறுஞ்செய்தி அனுப்பாமல் இருக்க முடியுமா? இவையெல்லாம் எப்படி மனித உடலின் உறுப்புகளாக மாறின?

நகரம் முதல் கிராமம் வரை கிழவிகள் முதல் குழந்தைகள் - வரை நைட்டிதான் பொது உடை. எங்கும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள். மண்ணில் கால் பதிக்காத குழந்தைகள்.

குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதில்தான் எவ்வளவு மாற்றங்கள்? பாவம்! குலதெய்வங்கள், சினிமா நடிகர் - நடிகைகளின் பெயர்களுக்கு முன்னால் அடிபட்டுப்போய்விட்டன.

தெருவில் விளையாட வேண்டிய குழந்தைகள் கணினியில் விளையாடுகின்றன. குழந்தை கவனிப்பு நிலையங்கள் மட்டுமல்ல; முதியோர் இல்லங்களும் நாளுக்கு நாள் அதிகரித்தவாறு இருக்கின்றன.

பொருள்களை வாங்கி மடியில் கட்டிக்கொள்வது எத்தனை ஆண்டு காலப் பழக்கம்? இன்று பிளாஸ்டிக், பொலித்தீன் பைகளில் வாங்குவதுதான் நாகரிகம் என்றாகிவிட்டது. ஒரே ஒரு பிஸ்கட் பைக்கெற் வாங்கினாலும் பொலித்தீன் பையில் போட்டுத்தான் வாங்குகிறோம்.

இன்று பேசும் மொழி, ஊடக - சினிமா மொழியாக இருக்கிறது. உடை, சினிமா நடிகர் - நடிகைகளின் உடையாக இருக்கிறது. பெரும் கலாசார விழாவாக நாம் கொண்டாடும் பொங்கல், தீபாவளியைக்கூட இன்று தொலைக்காட்சியைப் பார்த்த படிதான் கொண்டாடுகிறோம். கோயில் கும்பாபிஷேகம் மாதிரி மாறியிருக்கின்றன திருமணங்கள்.

இன்று ஒரு லீற்றர் தண்ணீர் 50 ரூபாய். கல்விக்கூடங்கள் தொழிற்சாலைகளாக மாறிவிட்டன. கருங்கல், செங்கல், மணல் மாதிரி எல்.கே.ஜி. ஒரு லோட், பிரி.கே.ஜி. ஒரு லோட் என்ற கணக்கில் கொண்டுவந்து குழந்தைகளைக் கொட்டுகிறார்கள். ஜனநாயக விரோதச் செயலை, அடக்குமுறையைப் பள்ளியின் பெருமையாகப் பேசும் பெற்றோர்கள்.

இன்று நாட்டில் இருக்கிற நிறுவனங்களின் முதலாளிகள் யார், எந்த நாட்டைச் சார்ந்தவர் என்று அந்த நிறுவனத்தில் வேலை பார்க்கும் தொழிலாளிக்குத் தெரியுமா? சந்தேகம்தான். 1970-80 காலம் வரைகூட முதலாளி என்பவர் தொழிலாளியின் வீட்டு வைபவங்களில் பங்கேற்கக்கூடிய நபராக இருந்திருக்கிறார்.

சமூகம் பெற்றிருக்கும் வளர்ச்சி நல்லதா, கெட்டதா? நவீன தொழில்நுட்பத்தால் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நல்லதா, கெட்டதா? தனிமனித வாழ்வில், குடும்ப வாழ்வில், சமூக வாழ்வில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றங்கள் குறித்து தமிழ்க் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் அக்கறைப்பட்டிருக்கின்றனவா? தமிழ் எழுத்தாளர்கள் கவலைப்பட்டிருக்கிறார்களா?

இதுகுறித்து வெகுஜன இதழ்கள் எழுதிய அளவுக்குக்கூட இலக்கிய இதழ்கள், இலக்கிய எழுத்தாளர்கள் கவலைப்படவில்லை.

எழுத்தாளர்களின் கண்ணில் எது படுகிறது? நிகழ்கால வாழ்வு குறித்து அதன் நெருக்கடிகள், வலிகள், சௌகரியங்கள் குறித்து, தனிமனித வாழ்வில், குடும்ப வாழ்வில், சமூக வாழ்வில் தொழில்நுட்பம் ஏற்படுத்திய விளைவுகள் குறித்து எப்போது எழுதுவார்கள்?

அப்படியென்றால், நம்முடைய இலக்கியகர்த்தாக்கள் எந்த உலகில் இருந்துகொண்டு, தங்களுடைய அதி உன்னதமான இலக்கிய ஆக்கங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்?


## அறிவிக்கப்பட்ட மின் வெட்டு

தோசை மாவை அரைத்து
முடித்தாயிற்று.
மோட்டார் போட்டு தண்ணீரை
மேலே ஏற்றியாகிவிட்டது.
எட்டு மணிக்குள் பாதுகாப்பான இடம்
தேடி உட்கார்ந்தாகிவிட்டது
8ஆயிற்று
மின் வெட்டு ஆகவில்லை
8.01ஆயிற்று
8.02 ஆயிற்று
பதற்றம் நீடிக்கிறது

- முகுந்த் நாகராஜன் -



# ஜெயலலிதா ஏன் கூட்டமைப்பை சந்திக்கவில்லை?



- ஆர்.கே. -

புதுடில்லி விஜயத்தை முடித்துக் கொண்ட கூட்டமைப்பினர், தமிழ் நாடு சென்றனர். முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்திப்பதே நோக்கம் என்று ஊடகங்கள் தெரிவித்திருந்தன. ஆனால் அப்படி ஒன்றும் நிகழவில்லை. மாறாக, பி.ஜே.பி.யின் தமிழ் நாட்டு தலைவர்களை சந்தித்து உரையாடியிருந்தனர். சந்திப்பின் இறுதியில், ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலும் சம்பந்தன் பங்குகொண்டிருந்தார்.

இதன் போது சம்பந்தன் பிரிவினை பொருத்தமானதல்ல ஏனெனில் அதனை இந்தியா ஆதரிக்காது என்னும் பொருள் பட கருத்துத் தெரிவித்திருந்தார். சம்பந்தன் அவ்வாறு தெரிவித்ததுதான் தாமதம், பிரபாகரனின் இலட்சிய பாதுகாவலர்களாக தங்களைக் கருதிக் கொண்டிருக்கும் நெடுமாறன் மறுநாளே ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இல்லை என்றவாறு நெடுமாறன் தெரிவித்திருந்தார்.

சம்பந்தன் தமிழ் நாட்டில் தங்கியிருந்த வேளையில் சுரேஸ் பிரேமச்சந்திரன் பெங்களூரில் தங்கியிருந்த பிரபல ஆன்மீகத் தலைவர் சுவாமி ரவிசங்கரை சந்திப்பதற்காக சென்றிருந்தார். "வாழும் கலை" என்னும் நிறுவனத்தை சர்வதேச அளவில் நடத்திவரும் ரவிசங்கர் பி.ஜே.பி. வட்டாரத்தில் செல்வாக்குள்ளவராவார். விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்தநிறுத்தம் கேள்விக்குள்ளாகியிருந்த நிலையில், வன்னிக்கு ஒரு விசேட செய்தியுடன் சுவாமியார் சென்றிருந்தார். அது என்ன செய்தியென்று இன்றுவரை தெரியாது. இப்படியொரு பின்னணியில்தான், சுரேஸ் பிரேமச்சந்திரன் ரவிசங்கர் சுவாமியின் அரசியல் ஆசியை பெறும் நோக்கில் சென்றிருக்கிறார். இன்று தமிழ் மக்களின் அரசியலை எவரெல்லாம் கையாளுகின்றார்கள் என்பதை கண்டுபிடிப்பதே கடினமாக இருக்கிறது. சுவாமியார்களிடமெல்லாம் அரசியல் பேச வேண்டிய நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஜெயலலிதா கூட்டமைப்பை சந்திப்பதை தவிர்த்து வருவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஜெயலலிதாவை பொறுத்தவரையில் தமிழர் விவகாரத்தில் கூட்டமைப்பின் நிலைப்பாடான ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்பதை ஏற்க முடியாது. இது ஒரு காரணம் என்றால் அடுத்தது, ஜெயலலிதா பற்றி முன்னர் புலிகள் நடந்து கொண்ட முறை. ஜெயலலிதா குறித்து தமிழ் தலைவர்கள் மத்தியில் தரக்குறைவான அபிப்பிராயங்களே இப்போதும் இருக்கின்றன. இப்படியான அபிப்பிராயங்கள் இலங்கையில் இருக்கும் தமிழ் தலைவர்களிடம் இருக்கின்றன என்பது ஜெயலலிதாவிற்கும் தெரியும்.

விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக இருந்த அன்ரன் பாலசிங்கம் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் பேசுகின்ற போது, ஜெயலலிதாவை குண்டம்மா என்றே பரிகசிப்பார். அதன் மூலம் ஜெயலலிதாவை எல்லாம் நாங்கள் கண்டுகொள்ளத் தேவையில்லை என்றவாறே மக்களுக்குச் சொல்வார். புலிகள் மட்டத்திலும் ஜெயலலிதா குறித்து தரக்குறைவான அபிப்பிராங்களே இருந்தன. இப்படியான விசயங்கள் ஜெயலலிதாவிற்கு வெறுப்பை ஏற்படுத்திவிட்டது. இதன் காரணமாகவே ஜெயலலிதா பொதுவாகவே வடக்கு கிழக்கில் இருக்கும் தமிழ்த் தலைவர்களை மதிப்பதில்லை. இதனை அறிந்து வைத்திருப்பதாலேயே இவர்களும், ஜெயலலிதாவை சந்திப்பதற்கான தீவிர முயற்சிகளை செய்யாமல் இருக்கின்றனர்.

ஜெயலலிதாவிற்கு இன்னொரு பிரச்சினையும் உண்டு. கூட்டமைப்பினுடனான சந்திப்பின் போது இந்தியப் பிரதமர் மோடி, இலங்கை அரசியல் யாப்பிற்குட்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு தீர்வைக் காணுமாறு ஆலோசனை வழங்கியிருக்கின்றார். ஆனால் ஜெயலலிதாவோ தனிநாட்டுக்கான பொது வாக்கெடுப்பிற்கு மோடி அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும் என்று மோடியுடனான முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பின்போது வழங்கிய மனுவிலேயே வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் மோடி அதனை ஒரு விடயமாகவே கருத்தில் எடுக்கவில்லை. அது கருத்திலெடுக்கக் கூடிய விடயம் இல்லை என்பது ஜெயலலிதாவிற்கும் தெரியும். ஆனால் வேண்டுமென்றே ஜெயலலிதா அப்படியொரு வேண்டுகோளை விடுத்தார். இதன் மூலம் தமிழ் நாட்டில் உள்ள அனைவரையும் வாயடைக்கச் செய்தார். ஆனால் இன்று சம்பந்தன் தமிழ் நாட்டில் வைத்தே ஜெயலலிதாவின் நிலைப்பாட்டை மறைமுகமாக நிராகரித்திருக்கின்றார். அதனையும் பி.ஜே.பி.யின் மேடையில் வைத்தே தெரிவித்திருக்கின்றார்.

ஜெயலலிதாவை பொறுத்தவரையில் அவர் இலங்கை தமிழ் மக்கள் பற்றி பேசிவருவதானது தமிழ் மக்கள் மீதுள்ள அக்கறையினால் அல்ல. மாறாக தமிழ் நாட்டில் தன்னுடைய அரசியல் ஸ்திரத் தன்மையை பேணிப் பாதுகாப்பதற்கும், இலங்கை தமிழர் பிரச்சினையை வைத்து தனக்கு நெருக்கடிகளை கொடுக்க முனையும் தன்னுடைய அரசியல் எதிரிகளை ஓரங்கட்டுவதற்குமாகும்.

இப்படியொரு பின்னணியில் அவர் இலங்கைக்குள் தீர்வுகாண முற்படும் எவருடனும் உறவைப் பேண மாட்டார். ஆனால் இந்த விடயங்களை கூட்டமைப்பு பகிரங்கமாக மக்களுக்குச் சொல்வதில்லை. இதுதான் கூட்டமைப்பின் பிரச்சினை. ஜெயலலிதா, நெடுமாறன், வைகோ, சீமான் போன்றவர்கள் இலங்கைத் தமிழ் மக்களை தங்களின் அரசியல் லாபத்திற்காக பயன்படுத்துகிறார்கள் என்றால் அதற்கான முழுப் பொறுப்பும் கூட்டமைப்பையே சாரும். கூட்டமைப்பு இவர்களை உரிய நேரத்தில் கண்டித்திருந்தால் இப்படியொரு நிலைமை ஏற்பட்டிருக்காது.

## குறுஞ்செய்தி முத்துக்கள்...

**மேதை என்பவர் இரண்டு சதவீதம்**
**கற்பனையும்**
**தொண்ணூற்று எட்டு சதவீதம்**
**கடும் உழைப்பும் கொண்டவர்**

பொய் வாழவிடாது
உண்மை சாகவிடாது

**அளவுக்கதிகமான சந்தோஷத்தைக் கொடுப்பதும்,**
**அளவுக்கதிகமாக வலியைக் கொடுப்பதும்...**
**நாம் அதிகம் நேசித்தவர்கள் மட்டுமே**

உன் கை ரேகையைப் பார்த்து
உன் எதிர்காலத்தை நம்பிவிடாதே!
ஏனென்றால்,
கை இல்லாதவனுக்கும்
எதிர்காலம் உண்டு

**பேச வேண்டிய நேரங்களில்**
**அமைதியாக இருந்துவிட்டால்**
**அமைதியான நேரங்களில்**
**நிம்மதியாக இருக்க முடியாது.**

பணத்தைக் கொண்டு நாய் வாங்கிவிடலாம்.
ஆனால் அன்பைக் கொண்டுதான்
அதன் வாலை அசைக்க முடியும்.

**நம்மை நோகடிப்பவர்களை**
**நாம் நேசிக்கலாம்.**
**ஆனால்,**
**நம்மை நேசிப்பவர்களை**
**ஒருபோதும் நாம்**
**நோகடிக்கக் கூடாது.**

சோம்பேறிகளின் நாக்கு
சுறுசுறுப்பாக இயங்குகிறது

**போராடும் வரை வீண் முயற்சி என்பார்கள்...**
**வெற்றி பெற்றவுடன் விடா முயற்சி என்பார்கள்.**

அவசியம் இல்லாதவர்களிடம்
உண்மைகளைச் சொல்லாதீர்கள்!
அவசியமானவர்களிடம்
பொய்களைச் சொல்லாதீர்கள்.

**ஆசைப்படுவதை விட்டுவிடு**
**ஆசைப்பட்டதை விட்டுவிடாதே.**


விதைத்துக் கொண்டே இரு...
முளைத்தால் மரம்
இல்லையேல் உரம்.

**ஏமாற்றுவதைக் காட்டிலும்**
**தோற்றுப் போவது**
**மரியாதைக்குரியது**


எப்போதாவது வந்தால்
பிரியமாக இருக்கும்.
எப்போதுமே வந்தால்?...
பிரிகிற மாதிரிதான் இருக்கும்.

## கரன்சி நோட்டில் நாவலாசிரியை படம்!

ஜப்பான் நாட்டின் பிரபல நாவலாசிரியை கியேோ ஹுகுச்சி. இப்பெண்மணியின் ப்டம் ஜப்பானில் ஐந்தாயிரம் யென் கரன்சி நோட்டில் இடம் பெற்றுள்ளது. உலகிலேயே கரன்சி நோட்டில் ஒரு பெண் எழுத்தாளரின் படம் இடம் பெற்றது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.




## பளபளக்கும் பாத்திரங்களின் தன்மை!



மண்பானை, செம்பு பாத்திரம் உபயோகித்தலில் உள்ள நன்மை மறந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாக ஸ்டீல் எனும் பெயரில் அதனுள் உள்ள துருவினை பயன்படுத்தி நம் உடலிலும் துருவினை ஏற்றிக் கொள்கின்றோம்.

நாம் கடைகளில் வாங்கி பயன்படுத்தும் ஸ்டீல் பொருட்கள் அனைத்தும் கலப்படமே. எவையும் நூறு சதவீதம் ஸ்டீல் அல்ல. தூய ஸ்டீல் எப்போதும் துருவேறாது.

அதுபோல் நாம் உபயோகிக்கும் அலுமினிய பாத்திரங்களிலும் விஷத்தன்மை உண்டு.

ஒரு நாளில் 4 முதல் 5 மில்லிகிராம் அளவு அலுமினிய உலோகம் அதன் பாத்திரத்தில் செய்யும் சமையலால் நம் உடலில் புகுகின்றது. இது (Slow Poision) மெதுவாக உட்கிரகிக்கும் விஷமாகும். இதனால் நினைவு மறத்தல் முதல் கிட்னி பழுது நோய் வரை கொண்டு செல்லும்.

அலுமினியம் விலையும் குறைவு என்பதால், பெரும்பாலும் இதன் பயன்பாடு அதிக அளவில் உள்ளது.

# புதிர்ப்போட்டி இல. 06

**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு பாடங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

**இல .6.1**

## எத்தனை சொக்லேட்கள் ?...



பிறந்தநாளைக் கொண்டாட சாக்லேட்கள் வாங்க நினைத்தாள் புவனா. தன் தந்தையிடம் சென்று பணம் கேட்டாள். புவனாவின் தந்தை, 100 ரூபாய் கொடுத்து, இதற்குள் உன் வகுப்பு ஆசிரியர், தோழிகள் அனைவருக்கும் சொக்லேட் வாங்கிக் கொடுத்துவிடு என்றார்.


சிந்தித்தவாறே சென்ற புவனா வகுப்பு ஆசிரியருக்கும், நெருங்கிய தோழிகள் சிலருக்கும் சற்று விலை உயர்ந்த சொக்லேட்களைத் தேர்வு செய்து வாங்கினாள். பின், மீதி இருந்த பணம் முழுவதற்கும் சாக்லேட்களையே வாங்கி வந்தாள். வரும் வழியில், தோழி கலையரசியைச் சந்தித்தாள். இருவரும் பேசிக் கொண்டே வந்தனர். அப்போது கலையரசி, புவனா வாங்கிய சொக்லேட்களை எண்ணிப் பார்த்தாள். 100 சாக்லேட்கள் இருந்தன.

மொத்த சொக்லேட்களின் விலையினைக் கேட்டாள் கலையரசி. 100 ரூபாய் என்றாள் புவனா. என்ன 100 ரூபாய்க்கு 100 சாக்லேட்களா? ஒவ்வொன்றின் விலை என்ன என ஆர்வத்துடன் கேட்டாள் கலையரசி. இது 10 ரூபாய், இது 3 ரூபாய், மீதியுள்ளவை 50 பைசா என்றாள் புவனா.

1) புவனா வாங்கிய 10 ரூபாய் சொக்லேட்கள் எத்தனை?
2) 3 ரூபாய் சொக்லேட்கள் எத்தனை?
3) 50 சதம் சொக்லேட்கள் எத்தனை?

**இல .6.4**

## கண்களை நம்பாதீர்கள் மாயத் தோற்றம்



**இல .6.2**

## விடுகதைகள்

1. தண்ணீரில் காகம் உட்காரக் கூடாது! ஏன் தெரியுமா?
2. எத்தனை முறை தண்ணீரில் விழுந்தாலும், அது நனையாது! அது என்ன?
3. மேலே இருந்து விழுந்தவன்! அடிபடாமல் ஓடுகிறான்! அவன் யார்?
4. காலையில் எழுந்தவுடன் நாம் எல்லோரும் இதைத் திறந்து பார்க்கிறோம் - எதை?
5. பசைக் கூரைக்கு ஒற்றைத் தூண்! பழசாய்ப் போனபின் பத்துத் தூண்! அது எனன?
6. ஒழுங்காய் செல்லும் ஊர்வலம் காலால் மிதித்தால் கலவரம்! அது என்ன?
7. இறக்கை இருந்தும் பறக்காது! கால் இல்லாமல் ஓடும்! அது என்ன?
8. அடித்தாலும் பிரிய மாட்டாள்! அணைத்தாலும் ஒட்ட மாட்டாள்! அவள் யார்?

**இல .6.3**

## கிழமையைக் கண்டறிய ஒரு கணக்கு!

பிறந்த நாள் அல்லது முக்கியமான ஏதாவதொரு நாளைக் குறிப்பிட்டுச் சொன்னால், நீங்கள் அந்த நாளுக்கான கிழமையைக் கணக்கிட்டுக் கூற முடியும். எப்படி என்கிறீர்களா?

| | |
|---|---|
| ஜனவரி - 0 | பெப்ரவரி - 3 |
| மார்ச் - 3 | ஏப்ரல் - 6 |
| மே - 1 | ஜூன் - 4 |
| ஜூலை - 6 | ஆகஸ்ட் - 2 |
| செப்ரெம்பர் - 5 | ஒக்ரோபர் - 0 |
| நவம்பர் - 3 | டிசம்பர் - 5 |



இதை மட்டும் குறித்து வைத்துக்கொள்ளுங்கள் அல்லது தங்கள் மனதினில் பதியவைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் யாரிடமாவது அவர்களுடைய பிறந்த நாள் அல்லது குறிப்பிடத்தக்க ஒரு நாளைக்கேளுங்கள்

**இல .6.5**

## தமிழ் எண் விளையாட்டு

தமிழ் எண்களை நினைவில் கொள்ளும் விதமாகவும் சில விடுகதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தலையில் எட்டு
இடையில் ஐந்து
கடையில் மை
எல்லாம் சேர்ந்தால் மேன்மை. அ்.து என்ன?

**இல .6.6**

## திறமை உள்ளவர்களுக்கு மட்டும்


1.எட்டு, எட்டைக் கூட்டினால் 1000 வரவேண்டும். இந்த எட்டு, எட்டையும் நீங்கள் எப்படி வேண்டுமானாலும் போட்டு கூட்டிக்கொள்ளலாம் ஆனால் கூட்டுத் தொகை 1000 வர வேண்டும்.

2. இருபத்தொன்பதில் 29 ஐக் கழித்தால் மீதி 9 வரும் எப்படி?

3.புகைவண்டி மட்டுமே செல்லக்கூடிய ஒரு பாலம் கடலுக்கு மேல் உயர்ந்து நிற்கிறது. இதில் புகைவண்டி வரும் போது எதிரே தெரியாமல் மனிதர் எவரும் நடந்து வந்தால் ஒன்று கடலில் குதிக்க வேண்டும். இல்லை, புகைவண்டியில் அடிபட்டு இறக்க வேண்டும். ஏனென்றால் தண்டவாளம் ரயில் மட்டும் செல்லக்கூடிய அளவுள்ளதாக உள்ளது. இந்நிலையில் ஒரு முறை ஒருவர் புகைவண்டி வரும்போது வெள்ளைத்துண்டை தலையில் கட்டிக்கொண்டு, வலது கையில் அரிவாளும், இடது கையில் ஒரு ஆட்டையும் பிடித்துக் கொண்டு இத்தண்டவாளத்தில் வருகிறார். இவர் இறக்காமல் எப்படி தன் உயிரை காப்பாற்றுவார் கூறுங்கள்.

4. ஒரு மரத்தில் 13 பறவைகள் அமர்ந்திருந்தன. அப்போது ஒரு வேட்டைக்காரர் அம்மரத்தில் ஒரு பறவையை மட்டும் குறிவைத்துச் சுட்டுவிடுகிறார். சுட்ட பறவை கீழே விழுந்து விடுகிறது. மரத்தில் இருந்த 13 பறவையில் 1 பறவை இறந்த பின் மீதம் எத்தனை பறவைகள் மரத்தில் இருக்கும்?

5. ஒரு மிருகக்காட்சி சாலையில் பல பறவைகளும், விலங்குகளும் இருக்கின்றன. அதில் மொத்தம் 36 தலைகள், 100 கால்கள் இவற்றில் பறவைகள் எத்தனை? விலங்குகள் எத்தனை?



6. விகடகவி இந்த வார்த்தையை முன்னும், பின்னும் வாசித்தாலும் ஒரே பொருளை தரும். இது போல் ஏதேனும் இரு தமிழ் வார்த்தைகள் கூற முடியுமா?

7. IT-ட்டது BUT-ட்டனால் WHAT-ட்டெண்ண என்று தயவு செய்து பதில் கூறவும்? 8. ஒருவன் கிழக்கு திசையை நோக்கி ஒரு தெருவுக்குள் நடந்து போகிறான், சிறிது தொலைவில் சென்றதும் இடது பக்கம் திரும்பி நடக்கிறான். அவ்வாறு வரும் போது அங்குள்ள நான்கு வழிச் சந்திப்பை வந்தடைந்தவன், இங்கிருந்து தனது இடது பக்கம் நடக்கிறான். பின்பு சிறிது தூரத்தில் வலது பக்கம் திரும்பி நடந்தவன் டக்கென்று இடது பக்கம் திரும்பி, மீண்டும் ஒரு இடது பக்கம் நடந்து வருக்கிறான். இப்போது அவன் எந்த திசை நோக்கி நடந்து வருகிறான் எனக்கூற முடியுமா?

9.மழைக்காலத்தில் ஒரு தவளை கட கட, கட கட எனக் கத்துகிறது. இதன் அருகே உள்ள மற்றொரு தவளை கர்ர கர்ர எனக் கத்துகிறது. இதில் முதலாவதாகக் கத்தும் தவளையின் குரலை மொழி பெயர்த்தால் வட்டி கேட்பவனைப் போலவும், இரண்டாவது தவளையின் குரலை மொழி பெயர்த்தால் வட்டி கொடுப்பவனைப் போலவும் அமையுமாறு மேற்கண்ட சொற்களைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். அது என்ன வார்த்தை? 10. இது சென்னையில் வசிக்கும் ஒரு குடிகாரனின் கவிதை. முடிந்தால் தூய தமிழில் மொழிபெயர்ப்பு செய்யுங்கள்.

## சென்றவார புதிர்களுக்கான விடைகள்

**இல். 5.1**

செல்வியின் எடை =40kg
தேவியின் எடை =30kg
கவிதாவின் எடை =26kg

**இல .5.2**

12 விரல் = 1 சாண்
24 விரல் = 1 முழம்
2 சாண் = 1 முழம்

**இல .5.3**

1. அவன் செய்த மொத்த பானைகள் எத்தனை? 60
2. அவன் உடைத்த பானைகள் எத்தனை? 0

**இல.5.4**

2000 ரூபாவிற்கு 5 கோழிகள், இதில் முதலாமவளின் 2 கோழிகளும் இரண்டாமவளின் 3 கோழிகளும் ஒரு முறையில் விற்கப்படும். 12 முறையில் 60 கோழிகளும் விற்கப்பட வேண்டும். இங்கு 10 ஆம் முறை விற்கும் போது முதலாமவளின் 20 ஆவது கோழியும் இரண்டாமவளின் 30 ஆவது (கடைசி) கோழியும் விற்கப்படும். 11,12 ஆம் முறைகளில் முதலாவளின் 10 கோழிகள் மாத்திரமே விற்கப்படும். அவற்றில் 4 முதலாமவள் விலைக்கும் 6 இரண்டாமவளின் விலைக்கும் விற்கப்படுவதால் அவ் 6 கோழிகளினாலேயே 1000 ரூபா நட்டம் ஏற்படுகிறது.

அதாவது 6 கோழிகளின் உண்மை விலை =3000
6 கோழிகளை விற்றவிலை = 2000
எனவே நட்டம் 1000 ரூபா.

**இல.5.5**

நீள் வடிவமாக, அல்லது சதுர வடிவமாக இருந்தால் அதன் மூடி மூலைப்பாட்டின் பக்கமாக (மூலை விட்டம் நீள மாக இருப்பதால்) உள்ளே விழும் சந்தர்ப்பம் அதிகம். அதனைத் தவிர்ப்பதற்காகவே மூடியும், வாயிலும் வட்ட வடிவமாக அமைந்துள்ளது.

**இல.5.6**

அங்கு இருந்த மற்றைய மூவரும் பெண்களாவர். அதனால் பொலிசாருக்கு கந்தசாமியை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது

**இல.5.7**

1) தலை அலங்கோலமாக இருக்கும் முடி திருத்துபவரிடம் செல்ல வேண்டும், ஏனெனில் அவர் மற்றைய முடி திருத்துபவரின் முடியை அழகாக வெட்டியுள்ளார்.
2) ஒரே முறையில் பெட்டிகளின் பெயர்களை சரியாக மாற்றலாம். எவ்வாறெனின் ஒரு வெள்ளை நிறப் பந்தும் ஒரு கருப்பு நிறப் பந்தும் (டீரூறு) உள்ள பெட்டியிலிருந்து ஒரு பந்தை எடுக்கவும். அப்பெட்டியின் பெயர் பிழையாக உள்ளதால் அது நீங்கள் எடுத்த பந்தின் நிறத்திற்குரிய பெட்டியாக இருக்க வேண்டும். எனவே மற்றைய இரு பெட்டிகளையும் பெயர்களை மாற்றுவதன் மூலம் மூன்றையும் சரியாக மாற்றலாம்.

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:- யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் கல்லூரி.

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ----------------------------------------
பாடசாலை :- ----------------------------------------
கல்வி கற்கும் தரம் :- ----------------------------------
வீட்டு முகவரி :- ----------------------------------------
தொ.பேசி இலக்கம் :- ---------------------------------

# வாழ்வாதார மேம்பாடு தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் அதிக அக்கறை

## வாழ்வின் எழுச்சி இணைப்பாளர் தெரிவிப்பு



மக்களின் வாழ்வாதார மேம்பாடு தொடர்பில் தொடர்ச்சியான உதவியுடன் மிகுந்த அக்கறையும் கொண்டவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என யாழ். மாவட்ட வாழ்வின் எழுச்சித் திட்ட இணைப்பாளர் ரகுநாதன் தெரிவித்துள்ளார்.

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற எள்ளுசார் உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கத்திற்கு எள்ளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் வகையில் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் அமைசசர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வ்ழிகாட்டலுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் அரசின் ஊடாக கிடைக்கப் பெறும் உதவித் திட்டங்களைக் கொண்டு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாடு தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் செயற்படும் அமைசசர், அதற்கான திட்டங்களை அந்தந்த அரச நிறுவனங்கள் ஊடாக அரசின் கொள்கைத்திட்டங்களுக்கு அமைவாக முன்னெடுத்து வருகின்றார். இதன டிப்படையில் தான் தென்னிலங்கையிலிருந்து எள்ளைப்பெற்றுக் கொடுத்து எள் சார்ந்த தொழிற்துறையாளர்களின் மேம்பாட்டிற்காகவும் பல்வேறுபட்ட உதவித்திட்டங்களை வழங்கியுள்ளார்.

இதன்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் சிவகெங்காதரன், மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி ஜெயந்தா சோமராஜ், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா ஆகியோர் உடனிருந்தனர்.

# வவுனியா வடக்கு பிரதேச சபையில் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பில் பாரபட்சம்

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக பாதிக்கப்பட்டோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப் பதவிகளுக்காக 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விணணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் வவுனியா வடக்கைச்சேர்ந்த 500 இற்கும்மேற்பட்டோர் நூலக பரிசாரகர், காரியாலய உதவியாளர், சாதாரண தொழிலாளர்கள், மின் இணைப்பாளர்கள், சுகாதார தொழிலாளர்கள், காவலாளிகள் பதவிகளுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இந் நிலையில் நீண்ட காலத்திற்கு பின்னராக கடந்த மே மாதத்தில் பிரதேச சபையினால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு பலகேள்விகள் எழுபபியிருந்த நிலையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயாகள் காடசிப்படுததப்பட்டிருந்தன.

எனினும் ஆட்சேபனை இருப்பின் முறைப்பாடு செய்யலாம் என கூறப்பட்டதன் அடிப்படையில் பலரும் தெரிவு பட்டியலை ஏற்றுக்கொள்ளாத நிலையில் சாரதி மற்றும் நூலக பரிசாரகர் பதவிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இவற்றில் நூலக பரிசாரகர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டோரில் அந்த துறையில் சிறப்பு தகுதிகள் உள்ளவர்கள் புறந்தள்ளப்பட்டு அடிப்படைத் தகுதிகள் உள்ளோர் மட்டும் முன்னுரிமைப்பட்டிருந்ததாகவும் முறையிட்டிருந்தோர் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று சாரதி பதவிகளுக்கும் வவுனியா வடக்கில் பதிவுகள் இல்லாதோரும் தெரிவு பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் இவ் விடயம் தொடர்பாக தாம் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.(70)

# இந்துக்களின் குரல் மாத இதழ் வெளியீடு

யாழ். இந்துத்துவ வெளியீடான இந்துக்களின் குரல் இந்து தேசிய மாத இண்டாவது இதழ் வெளிவந்துள்ளது.

இவ் இதழில் விஞ்ஞானமும் மெய்ஞானமும், சித்தத்தை வென்ற சித்தானைக் குட்டி சுவாமிகள், தமிழ் கற்கும் அமெரிக்க குழந்தைகள், கண்ணதாசனும் அர்த்தமுள்ள இந்துமதமும், சரிசெய் ஊடகங்களின் இந்துதர்ம எதிர்ப்புக்கள், இந்துக்குடும்ப வாழ்க்கை நெறிமுறைகள், தேங்காய் உடைப்பதன் தத்துவம், இந்து சமயத்தின் ஓர் அறிமுகம், பிள்ளையாரை வழிபடுங்கள் போன்ற பல கட்டுரைகளை தாங்கி வெளிவந்துள்ளது.



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 93ஆவது நினைவு தினம் குருமன்காட்டுச்சந்தியில் அமைந்துள்ள அன்னாரின் சிலை முன்றலில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. கலாநிதி தமிழ் மணி அகளங்கன் தலைமையில்நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா நகரசபை செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (11)

# வாரம் ஒரு காரம்

## மீண்டும் வேண்டாம் ஐயோ!.... அந்த வலி.... உசுப்பேத்தி உணர்விழந்த வாழ்வு இனியும் எமக்கு வேண்டாம்...



விடிகின்ற பொழுதெல்லாம் அன்று ஒலித்தது பறவைகளின் குரலோசை மட்டுமல்ல போர் மேகங்களின் வெடியோசையும் தான்.

அன்றாடம் வெந்து நொந்து வேகியது உலையில் உள்ள அரிசி மட்டுமல்ல அப்பாவித் தமிழ்மக்களின் உடலில் உள்ள உள்ளமும் தான்.

தியாகம் என்கின்ற பெயரில் தீக்கிரையானது உசுப்பேத்திய அரசியல் வாதிகளின் உயிர்களல்ல அப்பாவித் தமிழ்ப் பிஞ்சுகளின் உயிர்கள் தான்.

வல்லாதிக்கம் என்கின்ற பெயரில் அன்று வடக்கில் கை நீட்டியது சிங்களப் பேரின வாதம் மட்டுமல்ல அரசியல் இலாபங்களிற்காக அரோகராப் போட்ட கூத்தமைப்புக் கும்பல்களும் தான்.

மீண்டும் இந்த நிலை தொடருமா?.... என்கின்ற ஐயப்பாடுகளெல்லாம் அர சியல்பக்கங்களில் உருவாகி வருகின்றன.. தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் தங்கள் பக்கங்களில் தவறுகளை இழைத்து வந்தால் இந்த நிலை மீண்டும் உருவாவதை யாரும் தடுக்க முடியாது.

தற்போது தமிழரசுக்கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா மறுவடிவம் எடுத்துள்ளார. **இவரிற்கு போரட்டம், அரச எதிர்ப்பு** என்பவற்றைத் தவிர அரசியல் பக்கங்களில் எதுவுமே தெரியாது. எதை எப்படிப் பெறவேண்டும். இதுவரை நடந்த அரசியலென்ன? எதனால் இந்த இழப்புக்கள் உருவானது? இனிவரும் காலம் எப்படித் தொழிற்படவேண்டும் என்கின்ற சிந்தனைகள் எதுவுமே இவருக்கு கிடையாது. ஏனெனில் மாற்றங்களை விரும்பாத பட்டை அரசியல் வாதி இவர்.

- "எம்மண்ணில் நாம் தலை நிமிர்ந்து வாழவேண்டுமாம் போரில் தோற்றுப் போனாலும் துவண்டு விடாதாம் எமது சமூகம்" வலியின் வரிகள் வெளியீட்டு விழாவில் – சுரேஸ் பிரேமச்சந்திரன்
- "வடக்கு – கிழக்கு இணைந்த ஓர் இறைமையுள்ள தமிழ் அரசுகிடைக்கும் வரை போரட்டம் வெடிக்குமாம்" – பேராளர் மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் தீர்மானம்
- "தமிழர் உணர்வின் ஒட்டுமொத்த பிரதிபலிப்பே ஆயுதப் போராட்டமாம்" – மீண்டும் சீற வைக்கின்றார் சித்தார்த்தன்

அன்று ஆயுதபலத்தோடு இருந்த விடுதலைப் புலிகளையே தோற்கடித்து உள் நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டுவந்த மகிந்த அரசிடம் கூட்டமைப்பினர் இவ்வாறு காலக்கெடு கொடுத்துள்ளனர். இதையரசு மதிக்காதபட்சத்தில் இதன் பின் அகிம்சை வழியில் மீண்டும் போராட்டமாம்....

**50 ஆண்டுகளுக்கு மீண்டும் பின்நோக்கிச் செல்கிறது தமிழர் தலைவிதி.**

"அஹிம்சைப் போராட்டங்கள் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் பயன் தராது" என்று தமிழ் இளைஞர்களை அன்று ஆயுதமேந்த வைத்து அவர்களை அழித்ததும் தமிழரசுக்கட்சிதான் இன்று மீண்டும் அஹிம்சை வழியென்கின்ற பெயரில் மீண்டும் ஓர் ஆயுதவழிப் போராட்டத்தையும் அழிவுகளையும் தூண்டுவதும் தமிழர்சுக்கட்சிதான். இதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டும் மீண்டும் எமது பிள்ளைகளையும் உறவுகளையும் இழக்க முடியாது. எம்மவரை விட இந்திய நாட்டு மக்கள் இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்கினறனர். **சமூக மானிட வாழ்வியலையும் உயிரியல் உத்தரவாதங்களையும் உறுதிப்படுத்திய பின்பே அரசியல் பக்கங்களைப் பலப்படுத்த முயல்கின்றனர்.** இதனால் தான் பல்லின மக்கட்சமூகம் அங்கிருந்தும் எவராலும் அவர்களை உசுப்பேத்தி உருமாற்ற முடியாமல் இருக்கின்றது. இதனால்தான் அங்குள்ள அரசியல் வாதிகள் பிழைக்க இங்குள்ள தமிழர்களை உசுப்பேத்துகின்றனர்.

வாழ்வியலைத் தொலைத்து, எம் சந்ததியை சாகடித்து சரித்திரம் படைத்து என்ன இலாபம். எது சுதந்திரம்?.... இதுவா?.... எது சுயநிர்ணயம்? எமது சந்ததியின் சாவை நாமே தீர்மானிப்பதா?.... **அவரவர் புகழுக்கு ஆங்காங்கே போட்ட அலங்காரங்கள் தான் இவை.**

அனைவரும் வாழ்வதற்காகத்தான் இந்த பூமி. அடுத்தவன் உயிரை சாகடித்து பணயம் வைத்து அதில் சுயநிர்ணயம் சுதந்திரம் பேசி என்ன பயன்?

**உசுப்பேத்தி உணர்விழந்த வாழ்வு இனியும் எமக்கு வேண்டாம்.** இன்னொருவனின் இழப்புக்கள்தான் தமிழர் இருப்பினைத் தக்க வைக்குமென்றால் அந்த இழிவான இருப்பே தமிழர்க்குத் தேவையில்லை.

அன்றும் இதுதான் நடந்தது அடுத்தவன் உரிமைக்காக ஆராரோ பெத்த பிஞ்சுகள் அனலில் வெந்தன. இனியும் இதுதான் நடக்கப்போகின்றது.


வேரோடு எம்மினம் அழிந்தபின்புதானா வெள்ளை வேட்டியை வெளுத்துக்கட்டும் கூட்டமைப்பின் வேட்கையடங்கப்போகின்றது..?

# எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியில் தன்னிறைவு

## கால்நடை வள அமைச்சின் செயலர் நம்பிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் இலங்கையை பாலினால் தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றுவதே கால்நடைவள மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் நோக்கம் என அவ் வமைச்சின் செயலாளர் எச்.லெஸ்லி திஸேரா தெரிவித்தார்.**



நாட்டின் பால் தேவையை பூர்த்தி செய்வதற்காக ஆண்டுக்கு 750 மில்லியன் லீற்றர் பால் தேவைப்படுகிறது. எனினும் இதுவரை 50 வீதத்திற்கும் குறைவாகவே நாம் உற்பத்தி செய்கிறோம். இலங்கையில் ஆண்டுக்கு 320 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

சிறந்த பால் உற்பத்தியை பெறுவதற்கு நல்ல இன பசுக்களைப் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கவேண்டும். அதற்கான நடவடிக்கையை அமைச்சு முன்னெடுத்து வருகிறது. தற்போது 2000 நல்லினப்பசுக் கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் 2500 நல்லினப்பசுக்களை இவ்வருடத்தில் இறக்குமதி செய்ய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. நல்லின பசுக்களை இறக்குமதி செய்து உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் நடவடிக்கை அமைச்சினாலேயே முன்னெடுக்கப்படுகிறது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாற் பசுக்கள் தேசிய கால்நடை வள சபையினூடாக (NLDB) போபத்தலாவ- மெனிம்பாம் மற்றும் டயகம ஆகிய பண்ணைகளில் பராமரிக்கப்படுகின்றன.

இப்பாற்பசுக்களில் 60 வீதமானவை பசுக்கன்றுகளாகும். அவை தற்போது பால் உற்பத்தியாளர்களுக்கும் தொழில முயற்சியாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இப்பால் உற்பத்தி நிலையங்களி னூடாக நாளொன்றுக்கு 21 000 லீற்றர் பால் பெறப்படுகிறது.

பாலுற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக நல்லினப்பசுக்களை இறக்குமதி செய்வது போன்று நாடுபூராவும் சினைப்படுத்தல் மத்திய நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. செயற்கை முறை சினைப்படுத்தலினூடாக கன்றுகளை பெற நாம் எதிர்பார்த்துள்ளோம். நாடு பூராவும் சுமார் 1000 சினைப்படுத்தல் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான நிலையங்களை நடத்துபவர்களுக்கு அமைச்சு ஒரு இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது.

# வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவுகள் மீள ஆரம்பம்

இரண்டு வருடங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வெளிவாரி பட்டப்படிப்பிற்கான பதிவுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் கற்கைக்காக இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிவாரிப்பட்டப்படிப்பின் தரத்தை பேண வேண்டும் என்பதன அடிப்படையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வெளிவாரி பட்டப்படிப்பிற்கான பல்கலைக்கழக பதிவுகளுக்கான கட்டணங்களை களனி பல்கலைக்கழகம் அதிகளவு உயர்த்தியுள்ளதாக வெளிவாரி பட்டப்படிப்பை பாதுகாக்கும் அமைப்பின் இணைப்பாளர் மதுசங்க பண்டார தெரிவித்துள்ளார்.

இதன்படி 7 ஆயிரத்து 500 ரூபாவாக இருந்த கலைத்துறை பிரிவு வெளிவாரி பட்டதாரியின் பதிவு கட்டணம், 68 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ள்ரர்.

# கடலாமை இறைச்சியுடன் வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா பஸ் நிலையப் பகுதியில் கடலாமை இறைச்சி வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பகுதியில் இருந்து கடலாமை இறைச்சியை வாங்கிய ஒருவர் தம்புள்ள செல்வதற்காக பஸ் மூலம் வவுனியா வந்துள்ளார். வவுனியா பஸ் நிலையப் பகுதியில் உள்ள மலசலகூடத்திற்கு சென்ற போது சந்தேகம் அடைந்த பொலிஸார் அவரை அழைத்து அவரது பையை சோதனை செய்தபோது அதற்குள் கடலாமை இறைச்சி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நாளை இவர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# டெங்கு ஒழிப்பு வாரத்தில் பரிசோதனைகள் முன்னெடுப்பு



(கொழும்பு)

தற்போது இடம்பெற்று வரும் டெங்கு ஒழிப்பு வாரத்தில் இரண்டாவது கட்டமாக கல்வி நிறுவனங்களின் சுற்றாடல் தூய்மை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி கடந்த புதன் கிழமை 1,7676 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட. அவற்றுள் 7,336 இடங்களில் டெங்கு நுளம்பு பரவும் வகையிலான ஏழு நிலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றில் 1,402 வீட்டு உரிமையாளர்களுக்கு அறி வுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் 210 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வருடத்தின் கடந்த 5 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 29,109 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் கூடுதலானவர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொழும்பில் 9,899 பேரும், கம்பகாவில் 4,857 பேரும், இரத்தினபுரியில் 2,275 பேரும் களுத்துறையில் 1,938 பேரும், குருநாகலில் 1,987 பேரும், கேகாலையில் 1,208 பேரும், மாத்தளையில் 1,078 பேரும், காலியில் 697 பேரும், மட்டக்களப்பில் 647 பேரும் டெங்கு நோய்த்தாக்கத்தால் பீடிக்கப்பட்டு இனங்காணப்பட்டுள்ளனர்.

# நாட்டில் நிலவும் சமாதான சூழலே பல்வேறு மாற்றங்களுக்கு காரணம்

## அமைச்சர் பீரிஸ் பெருமிதம்



(கொழும்பு)

ஐந்து வருட காலத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களுள் 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான நவீன கல்வித்துறையைக் கட்டியெழுப்பியுள்ளமை முக்கிய மாற்றமாகக் குறிப்பிட முடியும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பதினவெவ மகாவித்தியாலயத்தில் தோதய விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர்,

நாட்டில் நிலவும் சமாதான சூழலும் நிலையான தன்மையும் பல்வேறு மாற்றங்களுக்கு வழி வகுத்துள்ளன. நான் கொழும்பு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணியாற்றியுள்ளேன். அந்த வகையில் இப்பிரதேசத்திலிருந்து மிகச் சொற்பமான மாணவர்களே பல்கலைக் கழகத்திற்குச் சென்றுள்ளதைக் குறிப்பிட முடியும்.

சில பகுதிகளுக்குத் தேவையான வசதிகள் இல்லாதிருந்தமையும் இதற்கு முக்கிய காரணமாகும் அக்காலத்தில் இரசாயன கூடங்கள் இருந்ததில்லை, விஞ்ஞான ஆய்வு கூடங்களும் இருக்கவில்லை. விளையாட்டு துறைக்கான வசதிகள் இருக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத்தகைய வசதிகளை தற்போது மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன் அனைவருக்கும் சமமான வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதை இலக்காகக் கொண்டு திட்டங்களை நடை முறைப்படுத்தி வருகின்றார். எந்த பாடசாலை மாணவரும் இரண்டாம் நிலைக்கு உள்ளாகாத வகையில் கிராமிய மாணவர்களுக்கும் வசதிகள் கிடைப்பதே நாம் மகிழ்ச்சியடையக் கூடிய விடயம்.

உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்றில்லாமல் எவ்வித பேதங்களுமின்றி சகலருக்கும் சமமான கல்வியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்த மான வகையில் கல்வியைப் பெற்றுக்கொண்டு சுயபலத்துடன் முன்னேறுவதற்கு மாணவர்கள் இதன் மூலம் தம்மை உருவாக்கிக் கொள்வது முக்கியம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஒக்கிட் பூக்கன்றுகளை கொண்டுவந்தவர் கைது



தாய்லாந்தில் இருந்து அந்தூரியம் மற்றும் ஒக்கிட் பூக்கன்றுகள் கொண்டுவந்த மற்றுமொரு நபர் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து 400 அந்தூரியம் மற்றும் ஒக்கிட் பூக்கன்றுகள் மீட்கப்பட்டதாக சுங்கப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தாய்லாந்தின் பேங்கொக் நகரில் இருந்து கொண்டு வரப்பட்ட இந்த பூக்கன்றுகளின் பெறுமதி 2 லட்சம் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட வெலிவேரிய பிரதேசத்தைச் சேர்ந்த நபரிடம் இருந்த பூக்கன்றுகள் அரசுடமையாக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் 10 ஆயிரம் ரூபா அபராதத்தில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரமும் தாய்லாந்தில் இருந்து அந்தூரியம் பூக்கன்றுகளை கொண்டுவந்த ஒருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளி,முல்லையில் கொள்ளை ஐந்து சந்தேக நபர்கள் கைது

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்ற கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களை கொண்ட கொள்ளையர குழுவொன்றை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேகநபர்களிடமிருந்து முச்சக்கரவண்டியொன்றும், மூன்று மோட்டார் சைககிள்கள், தங்கக்கட்டிகள், சைக்கிள்கள், கோடரிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர். கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் கடந்த வாரம் வீடொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 5 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என ஐந்து சந்தேகநபர்கள், கிளிநொச்சி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில், புதுக்குடியிருப்பில் 4 கொள்ளை சம்பவங்களுடனும், மாங்குளம், பூநகரி, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற தலா ஒவ்வொரு கொள்ளைச் சம்பவங்களுடனும் இவர்களுக்கு தொடர்புகள் இருப்பது தெரிய வந்துள்ளது.



**கிளிநொச்சியைச் சேர்ந்த பெண்ணொருவர், ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிரசவித்த சம்பவமொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் இடம்பெற்றுள்ளது.**

**பிரசவத்தை அடுத்து குழந்தைகளும் தாயும் நலமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.**

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்**

1) வியாபார நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதற்கு ஆதாரமாக, அத்தாட்சியாக அமைவது
1) மூலப்பதிவேடு 3) பேரேடு
3) மூல ஆவணம் 4) பரீட்சை மீதி (............)

2) மூலப்பதிவேடுகளானவை
1) எட்டு 2) ஆறு
3) ஒன்பது 4) நான்கு (............)

3) மூல ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு முதன் முறையாகப் பதியப்படும் இடம்
1) துணையேடு 2) துணைப்பேரேடு
3) பேரேடு 4) பொதுத்தினசேரி (............)

4) மூலப்பதிவேட்டில் முக்கியமான ஏடாகக் கருதப்படுவது
1) காசேடு 2) சில்லறைக் காசேடு
3) உட்திரும்பல் நாளேடு 4) விற்பனை நாளேடு (............)

5) மூலப்பதிவேடாகக் கருத முடியாதது
1) விற்பனை நாளேடு 2) வெளித்திரும்பல் நாளேடு
3) விற்பனைப் பேரேடு 4) பொதுத்தினசரி (............)

6) நாளேடுகள்... வகைப்படுத்தப்படும்
1) நான்கு 2) ஆறு
3) ஐந்து 4) மூன்று (............)

7) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற பணப் பெறுவனவுகளையும் பணக் கொடுப்பனவுகளையும் மட்டும் பதிவுசெய்து கொள்வதற்காக பராமரித்துக் கொள்ளப்படும் ஏடு
1) ஒருநிரல் காசேடு 2) இருநிரல் காசேடு
3) மூன்றுநிரல் காசேடு 4) சில்லறைக் காசேடு (............)

8) காசேடானது .... வகைப்படுத்தப்படும்
1) இரண்டு 2) ஐந்து
3) நான்கு 4) மூன்று (............)

9) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசுதொடர்பான பெறுவனவுகளையும், கொடுப்பனவுகளையும் மட்டும் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படுவது
1) காசேடு 2) இருநிரல் காசேடு
3) சில்லறைக் காசேடு 4) ஒருநிரல் காசேடு (............)

10) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசுதொடர்பான கொடுக்கல் வாங்கல்களுடன் வங்கி தொடர்பான கொடுக்கல் வாங்கல்களையும் மட்டும் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படுவது
1) முற்பணமுறைச் சில்லறைக் காசேடு 2) இருநிரல் காசேடு
3) காசேடு 4) நிரல்முறைச் சில்லறைக் காசேடு (............)

11) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசு, வங்கி, காசுக்கழிவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைச் சேர்த்துப் பதிவு செய்து கொள்வதற்காக் பராமரிக்கப்படும் காசேடு
1) சில்லறைக் காசேடு 2) முற்பணமுறைச் சில்லறைக் காசேடு
3) மூன்றுநிரல் காசேடு 4) இருநிரல் காசேடு (............)

12) உட்திரும்பல் நிகழ்விற்கான மூலஆவணம்
1) வரவுத்தாள் 2) செலவுத்தாள்
3) அடியிதழ் 4) விற்பனைப் பட்டியல் (............)

13) வெளித்திரும்பல் நிகழ்விற்கான மூலஆவணம்
1) வரவுத்தாள் 2) செலவுத்தாள்
3) கொள்வனவுப் பட்டியல் 4) அடியிதழ் (............)

14) விற்பனைப் பட்டியலை மூல ஆவணமாகக்கொண்ட கொடுக்கல் வாங்கல்
1) காசு விற்பனை 2) காசோலை மூலம் விற்பனை
3) விற்பனை 4) கடன் விற்பனை

15) வங்கிக்கூற்றை மூலஆவணமாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்
1) கடன்பட்டோன் வங்கியில் நேரடி வைப்பு
2) வங்கி செலுத்திய மின்சாரம்
3) வங்கி வசூலித்த பங்குலாபம்
4) மேற்கூறிய அனைத்தும் (............)

16) சம்பளம் செலுத்திய இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) சம்பளப் பட்டியல் 2) பற்றுச்சீட்டை
3) கச்சாத்து 4) அடியிதழ் (............)

17) காசோலை மூலம் கொடுப்பனவு இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) பற்றுச்சிட்டை 2) அடியிதழ்
3) கச்சாத்து 4) பட்டியல் (............)

18) காசு பெறுவனவிற்கான மூலஆவணம்
1) கச்சாத்து 2) பட்டியல்
3) பற்றுச்சிட்டை 4) செலவுத்தாள் (............)

19) காசுக்கொடுப்பனவிற்கான மூல ஆவணம்
1) கச்சாத்து 2) வரவுத்தாள்
3) பற்றுச்சிட்டை 4) அடியித்தழ் (............)

20) பிரயாணம் செலுத்தியது, சிறிய செலவுகள், அறவிடமுடியாக்கடன் இவற்றுக்கான சரியான மூலஆவணத் தொடர்
1) வழிச்செலவுத்துண்டு, சிறிய செலவுகள் கச்சாத்து, நாட்குறிப்புச் கச்சாத்து
2) பற்றுச்சிட்டை, கச்சாத்து, விற்பனைப்பட்டியல்
3) வரவுத்தாள், செலவுத்தாள், அடியிதழ்
4) செலவுத்தாள், அடியிதழ், வரவுத்தாள் (............)

21) வங்கியில் வைப்பு இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) செலவுத்துண்டு 2) வரவுத்துண்டு
3) செலவுத்தாள் 4) வரவுத்தாள் (............)

22) மூலப்பதிவேடாகவும் பேரேட்டுக் கணக்கில் ஒன்றாகவும் தொழிற்படும் துணையேடு
1) விற்பனை நாளேடு 2) கொள்வனவு நாளேடு
3) காசேடு 4) முறையான நாட்குறிப்பு(............)

23) காசேட்டின் வங்கிநிரலில் வரவில் பதியப்படும் பொருத்தமான ஓர் கொடுக்கல் வாங்கல்
1) காசு விற்பனை 2) காசோலைமூலம் விற்பனை
3) கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை
4) வங்கி வசூலித்த பங்குலாபம் (............)

24) காசேட்டில் எதிர்ப்பதிவு எனக் கூறப்படும் மிகமுக்கியமான கொடுக்கல் வாங்கல்
1) காசுவிற்பனை 2) வங்கியில் வைப்பு
3) வங்கி செலுத்திய காப்புறுதி 4) மின்சாரம் (............)

25) காசேட்டில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்
1) கவிக்கு விற்பனை 2) கொடுக்க வேண்டிய வாடகை
3) சுகந்தனிடம் கொள்வனவு 4) மேற்கூறிய அனைத்தும்

26) காசேட்டில் பதிவு செய்துகொள்ளப்படும் கழிவு
1) காசுக்கழிவு 2) கணியக் கழிவு
3) வியாபாரக் கழிவு 4) பருவகாலக் கழிவு (............)

27) காசேட்டின் ஞாபக நிரலாகக் கருதப்படும் நிரல்
1) வங்கி நிரல் 2) காசு நிரல்
3) கழிவு நிரல் 4) எவையுமல்ல (............)

28) காசேட்டின் பெறுவனவுப் பக்க (வரவுப்பக்க) கழிவு நிரல்
1) காசுக்கழிவு 2) கொடுத்த கழிவு
3) பெற்றகழிவு 4) வியாபாரக் கழிவு (............)

29) காசேட்டின் கொடுப்பனவுப்பக்க (செலவுப்பக்க) கழிவு நிரல்
1) பெற்றகழிவு 2) கணியக்கழிவு
3) வியாபாரக்கழிவு 4) பருவகாலக்கழிவு (............)

30) காசேட்டின் வரவுப்பக்க கழிவுத்தொகை
1) காசுக்கழிவுக்கணக்கில் பதியப்படும்
2) கொடுத்த கழிவுக்கணக்கில் வரவில் பதியப்படும்
3) பெற்றகழிவுக்கணக்கில் செலவில் பதியப்படும்
4) வியாபாரக் கழிவுக்கணக்கில் பதியப்படும். (............)

31) காசேட்டின் செலவுப் பக்க கழிவுத்தொகை
1) வியாபாரக்கழிவுக்கணக்கில் பதியப்படும்
2) கணியக்கழிவுக் கணக்கில் பதியப்படும்
3) பெற்றகழிவுக் கணக்கில் பதியப்படும்
4) கொடுத்தகழிவுக் கணக்கில் பதியப்படும் (............)

32) காசேட்டின் செலவுப்பக்க வங்கி நிரலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லாதது
1) வங்கி செலுத்திய மின்சாரம் 2) வங்கிக்கட்டணம்
3) காப்புறுதி 4) காசோலைப் புத்தகக் கட்டணம் (............)

33) காசேட்டின் வரவுப்பக்க வங்கி நிரலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லாதது
1) கடன்பட்டோனின் வங்கியில் நேரடி வைப்பு
2) வங்கி வசூலித்த பங்குலாபம்
3) வங்கியிலிட்ட பணம்
4) காசோலை மூலம் விற்பனை (............)

34) நிறுவனக் கணக்குப் புத்தகங்களில் பதிவு இடப்படாத கழிவு
1) காசுக்கழிவு 2) கணியக்கழிவு
3) வியாபாரக்கழிவு 4) பருவகாலக்கழிவு (............)

35) பட்டியல் விலையிலிருந்து குறைத்து வழங்கப்படும் கழிவு
1) வியாபாரக் கழிவு 2) கணியக்கழிவு
3) காசுக்கழிவு 4) பருவகாலக்கழிவு (............)

36) 'நன்றி மீண்டும் வருக' எனும் வியாபாரப்புள்ளியில் 'ண்ண்க' எனும் குறி குறிக்கும் விலைப்பெறுமதி யாது?
1) ரூபா 580 2) ரூபா 250
3) ரூபா 620 4) ரூபா 520 (............)

37) பட்டியல் விலையானது எது சேர்ந்த விலையாகக் காணப்படும்?
1) கொள்விலை + இலாபம்
2) விற்பனை விலை + இலாபம்
3) உற்பத்திச் செலவு + இலாபம்
4) விற்பனைவிலை + கொள்விலை (............)

38) விற்பனை நாளேட்டில் .................................................. பதியப்படும்
1) காசு விற்பனை 2) நிலையான சொத்து கடன்விற்பனை
3) நாளாந்த கடன்விற்பனை 4) காசோலை மூலம் விற்பனை (............)

39) விற்பனை நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது ...... பதியப்படும்
1) விற்பனைக் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்பட்டோர் கணக்கின் வரவுப்பக்கம்
3) விற்பனைக் கணக்கின் செலவுப்பக்கம்
4) கடன்பட்டோர் கணக்கின் செலவுப்பக்கம் (............)

40) கொள்வனவு நாளேட்டில் .......... பதியப்படும்
1) காசோலை மூலம் கொள்வனவு
2) காசுக் கொள்வனவு
3) நிலையான சொத்து கடன்கொள்வனவு
4) மீள் விற்பனைக்கான பொருட்களின் கடன்கொள்வனவு (..............)

41) கொள்வனவு நாளேட்டில் .........இறுதி மொத்தத் தொகையானது
1) கொள்வனவுக் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்கொடுத்தோர் கணக்கின் செலவுப்பக்கம்
3) கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப்பக்கம்
4) கொள்வனவுக் கணக்கின் செலவுப்பக்கம் (..............)

42) உட்திரும்பல் நாளேட்டில் ......... பதியப்படும்
1) காசுக்கு விற்ற தளபாடம் திரும்பிவரின்
2) கடனுக்கு விற்ற சரக்கிருப்பு திரும்பிவரின்
3) காசுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின்
4) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின் (..............)

43) உட்திரும்பல் நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது .... பதியப்படும்
1) உட்திரும்பல் கணக்கின் செலவுப் பக்கம்
2) உட்திரும்பல் கணக்கின் வரவுப் ப்க்கம்
3) கடன்பட்டோர் கணக்கின் செலவுப் பக்கம்
4) 'கடன்பட்டோர் கணக்கின் வரவுப் பக்கம் (..............)

44) வெளித்திரும்பல் நாளேட்டில் .......... பதியப்படும்
1) காசுக்கு கொள்வனவு செய்த தளபாடம் திருப்பியனுப்பின்
2) கடனுக்கு விற்ற சரக்கிருப்பு திரும்பிவரின்
3) காசுக்கு விற்பனை செய்த சரக்கிருப்பு திரும்பிவரின்
4) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின் (..............)

45) வெளித்திரும்பல் நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது ... பதியப்படும்
1) கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்கொடுத்தோர் கணக்கின் செலவுப்பக்கம்
3) வெளித்திரும்பல் கணக்கின் வரவுப்பக்கம்
4) வெளித்திரும்பல் கணக்கின் செலவுப்பக்கம் (..............)

46) சில்லறைக்காசாளன் தலைமைக்காசாளனிடமிருந்து ஆரம்பத்தில் பெற்ற தொகை 9000 ரூபா சில்லறைக்காசாளன் குறிப்பிட்ட காலப்பகுதியில் செலவிடப்பட்ட தொகை 640 ரூபா எனின் கட்டுநிதி மீளளிப்பு இடம்பெறும் தொகை
1) 640 ரூபா 2) 8360 ரூபா
3) 9640 ரூபா 4) 9000 ரூபா (..............)

47) பொதுத் தினசேரியில் பதிவிடப்படும் கொடுக்கல் வாங்கல்
1) ஆரம்பப் பதிவு 2) செம்மையாக்கல்கள்
3) மூடும் பதிவு 4) மேற்கூறிய அனைத்தும் (..............)

48) பல இன பேரேட்டுக் கணக்குகளும் உள்ளடங்கிய ஓர் தொகுதி
1) மூலப்பதிவேடு 2) பேரேட்டுக் கணக்கு
3) பேரேடு 4) பொதுப்பேரேடு (..............)

49) பேரேட்டின் வகைகள்
1) துணைப் பேரேடு, பொதுப் பேரேடு
2) விற்பனைப் பேரேடு, கொள்வனவுப் பேரேடு
3) வருமானப் பேரேடு, செலவினப் பேரேடு
4) சொத்துப் பேரேடு, பொறுப்பேரேடு (..............)

50) துணைப்பேரேட்டில் உள்ளடங்குபவை
1) விற்பனைப் பேரேடு, விற்பனை நாளேடு
2) விற்பனைப் பேரேடு, கொள்வனவுப் பேரேடு
3) வருமானப் பேரேடு, செலவினப் பேரேடு
4) உப பேரேடு,பொதுப் பேரேடு (..............)

51) விற்பனைப் பேரேட்டில் ........... பதியப்படும்
1) கடன்பட்டோர் பெயர்கள் மட்டும்
2) கடன்கொடுத்தோர் பெயர்கள் மட்டும்
3) விற்பனைக் கணக்குகள் மட்டும்
4) கொள்வனவுக் கணக்குகள் மட்டும் (..............)

52) மீள்விற்பனைக்கான கடன்கொள்வனவின் போது எழுகின்ற தனிநபர் கடன்கொடுத்தோர் பெயர்களை உள்ளடக்கும் பேரேடு
1) விற்பனைப் பேரேடு 2) விற்பனைக் கணக்கு
3) கொள்வனவுக் கணக்கு 4) கொள்வனவுப் பேரேடு (..............)

53) இரட்டைப் பதிவு விதி என்பது
1) கொடுக்கல் வாங்கலுக்கு வரவுப் பதிவுக்கு சமமான செலவுப் பதிவு ஒன்று இடல்வேண்டும்..
2) கொடுக்கல் வாங்க்லுக்கு வரவுப் பதிவுக்கு சமமான செலவுப் பதிவு இடல் வேண்டும்.
3) கொடுக்கல் வாங்கலுக்கு இர்ண்டு பதிவுகள் இடல்வேண்டும்.
4) கொடுக்கல் வாங்கலுக்கு வரவில் அல்லது செலவில் இரண்டு பதிவு இடல் வேண்டும். (..............)

54) இரட்டைப்பதிவுத் தத்துவத்தின் தந்தை
1) இத்தாலி நாட்டைச் சேர்ந்த லூகா பெசியோலி
~~2) இஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த லூகாபெசியோலி~~
3) இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜோய்
4) இஸ்ரேலியநாட்டைச் சேர்ந்த ஜோய் (..............)

55) இரட்டைப் பதிவுத் தத்துவம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
1) 1449 ஆம் ஆண்டு 2) 1049 ஆம் ஆண்டு
3) 1494 ஆம் ஆண்டு 4) 1944 ஆம் ஆண்டு (..............)

56) கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவினை பூரணப்படுத்துவதற்காக பராமரித்துக் கொள்ளப்படுவது
1) பேரேடு 2) பேரேட்டுக் கணக்கு
3) மூலப்பதிவேடு 4) பரீட்சைமீதி (..............)

57) பேரேட்டுக் கணக்கின் சரியான வகைப்படுத்தல்
1) வருமானக் கணக்கு, செலவீனக் கணக்கு
2) மெய்க் கணக்கு, பேரளவுக் கணக்கு
3) பெயருள் கணக்கு, பெயரளவுக் கணக்கு
4) ஆட்குறிக்கும் கணக்கு, ஆட்குறியாக் கணக்கு (..............)

58) பெயருள் (ஆட்குறிக்கும்) கணக்கின் பிரிவுகள்
1) கடன்பட்டோர் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
2) வருமதியாளர் கணக்கு, வாடிக்கையாளர் கணக்கு
3) வழங்குனர் கணக்கு, விநியோகஸ்தர் கணக்கு
4) வருமதியாளர் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு (..............)

59) பெயரில் (ஆட்குறியாக்) கணக்கின் பிரிவுகள்
1) பேரளவுக் கணக்கு, பெயரளவுக் கணக்கு
2) பேரளவுக் கணக்கு, மெய்க் கணக்கு
3) கடன்பட்டோர் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
4) பெயருள் கணக்கு, மெய்க் கணக்கு (..............)

60) வருமானம், செலவீனம், நட்டம் என்பவற்றின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு
1) பெயரளவுக் கணக்கு 2) மெய்க்கணக்கு
3) பெயருள் கணக்கு 4) பெயரில் கணக்கு (..............)

61) சொத்துக்களின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு
1) பெயருள் கணக்கு 2) பேரளவுக் கணக்கு
3) பெயரளவுக் கணக்கு 4) மெய்க் கணக்கு (..............)

62) பெயரளவுக் கணக்கினை கொண்டுள்ள தொகுதி
1) தளபாடக் கணக்கு, சம்பளக் கணக்கு, விற்பனைக் கணக்கு
2) விற்பனைக் கணக்கு, விளம்பரக் கணக்கு, காப்புறுதிக் கணக்கு
3) மோட்டார்க் கணக்கு, காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
4) வங்கிக் கணக்கு, வங்கிக்கடன் கணக்கு, வங்கிக் கட்டணக்கணக்கு (..............)

63) மெய்க் கணக்கினை கொண்டுள்ள தொகுதி
1) மின்சாரக் கணக்கு, விளம்பரக் கணக்கு. காசுக் கணக்கு
2) பெற்றவாடகைக் கணக்கு, பெற்ற வட்டிக் கணக்கு, விற்பனைக் கணக்கு
3) மின்சாரக் கட்டுப்பணக் கணக்கு, காசுக் கணக்கு, பெறவேண்டிய வாடகைக் கணக்கு
4) காசுக் கணக்கு, காப்புறுதிக் கணக்கு, மின்சாரக் கட்டணக் கணக்கு (..............)

64) வரவு மீதியைக் கொண்டுள்ள கணக்குகள்
1) வாடகைக் கணக்கு, தளபாடக் கணக்கு, காசுக் கணக்கு
2) பெற்ற கழிவுக் கணக்கு, தளபாடக் கணக்கு, வங்கிக் கணக்கு
3) பெற்றவாடகைக் கணக்கு, மோட்டார் கணக்கு, விற்பனை கணக்கு
4) மின்சாரக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு (..............)

65) செலவு மீதியைக் கொண்டுள்ள கணக்குகள்
1) முதலீட்டுக் கணக்கு, காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
2) பெற்றவட்டிக் கணக்கு, பங்குலாபக் கணக்கு, விற்பனைக் கணக்கு
3) தளபாடக் கணக்கு, சம்பளக் கணக்கு, வங்கிக் கண்க்கு
4) மோட்டார் கணக்கு, மின்சாரக் கணக்கு, பங்குலாபக் கணக்கு (..............)

## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வெளியான தரம் - 4 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி வினாத்தாள்களின் விடைகள்

### 07 செப்ரெம்பர் 2014 ஞாயிற்றுக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 8) 3 | 15) 3 | 22) 1 |
| 2) 2 | 9) 1 | 16) 2 | 23) 2 லீற்றர் |
| 3) 3 | 10) 2 | 17) 3 | 24) 2.35 |
| 4) 1 | 11) 1 | 18) 2 | 25) 3 |
| 5) 3 | 12) 2 | 19) 2 | 26) 1 |
| 6) 3 | 13) 1 | 20) 3 | |
| 7) 1 | 14) 2 | 21) 1 | |

### 09 செப்ரெம்பர் 2014 செவ்வாய்க்கிழமை

| | | | | |
|---|---|---|---|---|
| 1) வெள்ளம் | 8) கூறமுடியாது | 15) 60 பேர் | 22) ☒ | 26) 3 |
| 2) மடு | 9) நான்கு | 16) 120 பேர் | 23) ☒ | 27) 2 |
| 3) பிள்ளை | 10) நோர்வே | 17) 2 | 24) ☒ | 28) 2 |
| 4) √ | 11) 04 | 18) மீன்கள் | 25) ☒ | 29) 3 |
| 5) X | 12) 7 பேர் | 19) A | | |
| 6) X | 13) 26 பேர் | 20) 3 | | |
| 7) தாய் | 14) 15 பேர் | 21) 1 | | |

### 12 செப்ரெம்பர் 2014 வெள்ளிக்கிழமை


| | | |
|---|---|---|
| 1) ii | 7) ii | 13) ii |
| 2) iii | 8) (A) | 14) iii |
| 3) iii | 9) (C) | 15) ii |
| 4) iii | 10) (D) | 16) iii |
| 5) ii | 11) iii | 17) ii |
| 6) iii | 12) ii | 18) iii |





யாழ்.சென்பெனடிக்ற் வித்தியாலயத்தில் சுற்றாடல் கழக செயற்பாடுகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பதக்கமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண சுற்றாடல் அதிகார சபையின் பதில் பிரதிப் பணிப்பாளர் திருமதி விஜிதா, நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் மாணவர்களுக்கு பதக்கம் அணிவிப்பதையும் காணலாம்.

# வேலணை சிறுத்தீவில் அமைக்கப்படும் ஹோட்டல்



வேலணை பிரதேசசபைக்கு உட்பட்ட சிறுத்தீவுப் பகுதியில் உல்லாச ஹோட்டல் ஒன்று அமைப்பதற்காக-பல மாதங்களுக்கு முன்னர் ஆளுநர் சந்திரசிறி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அடிக்கல் நாட்டப்பட்டு பல மாதங்களுக்குப் பின்னர் தற்போது ஹோட்டல் அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

உல்லாச ஹோட்டல் அமையவுள்ள சிறுத்தீவு பகுதியானது -யாழ். கோட்டைக்கு தெற்குப் பக்கமாகவும் தீவக பிரதான பண்ணை வீதிக்கு கிழக்குப் பக்கமாகவும் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பெண்களின் வாழ்வாதாரம் மேம்பட மகளிர் அமைப்புக்கள் உருவாக வேண்டும்

## ஈ.பி.டி.பி.சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்களின் சமூக அக்கறையும் எழுச்சியுமே சமூகத்தில் அவர்கள் வாழும் சூழலின் கலாசாரங்களை பாதுகாப்பதோடு உரிமைகளையும் பெற்றுத்தருகின்றன. அதனை முன்னோக்கி நகர்த்துவதற்காகவே மகளிர் அமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன - என ஈ.பி.டி.பி யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் விள்ளானை கிராமத்தில் மாதர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் சிவாஜினி தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சர்வதேச முக்கி யஸ்தர் விந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரி



விக்கையில்,

பெண்களது மனங்களில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் தான் ஒவ்வொரு குடும்பத்தினதும் விழுமியங்களையும் பொருளாதாரத்தையும் மாற்றியமைக்க முடியும்.

அப்படி ஒவ்வொரு குடும்பங்களும் மறுமலர்ச்சியடைவதன் மூலம் தான் சமூகமும் அப்பிரதேசமும் வளர்ச்சியடைகின்றது.

சாதாரண ஒரு பெண்ணால் சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்றால் ஒன்றுபட்ட் பெண்களின் அமைப்புக்கள் மூலமாக சமூகத்தில் எத்தனை பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்று பெண்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் வலி தெற்கு அமைப்பாளர் வலன்ரீன், அப்பகுதி கிராம சேவகர், 'சமுர்த்தி உத்தியோக்த்தர் கௌரி மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் அப்பகுதி பெண்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் மன்னார் மீனவர்களின் வருவாய் பாதிப்பு

## மன்னார் மீனவச் சங்க சமாசத் தலைவர் கவலை

(மன்னார்)

மன்னார் மாவட்ட மீனவர்கள் தமது வருவாயை பெற்றுக்கொள்வதில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட மீனவர்கள் தமது நாளாந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதை அவதானிக்கக்கூடியாதாகவுள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை சட்டவிரோதமாக பயன்படுத்துவதன் காரணத்தினாலேயே மீனவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக இந்திய மீனவர்களின் இழுவைப்படகு முறைமையிலான தொழில் முறைகள், நாட்டுப்படகுகளின் தொழில் நடவடிக்கைகள் காரணமாக மாவட்ட மீனவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

நாட்டுப்படகுகளில் வருகைதரும் இந்திய மீனவர்கள் கடலில் நீண்ட நாட்கள் தங்கி நின்று மீன் பிடித்துச் செல்லுகின்றனர்.இதனால் நாளாந்தம் தொழிலுக்குச் செல்லும் எமது மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மேற்குறித்த தொழில் முறைகள் இலங்கை அரசாங்கத்தினால் எமது மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்ட தொழில் முறைகளாக காணப்படுகின்றது.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ள மீன் பிடி உபகரணங்களை பயன்படுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையின் வட பகுதியில் அதிலும் மன்னார் மாவட்டத்தில் இவ்வாறான தொழில் நடவடிக்கைகள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துமீறி தடை செய்யப்பட்ட மீன் பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்டால் குறித்த வலைத் தொகுதிகள் பறிமுதல் செய்யப்படுவதோடு குறித்த மீனவர்களுக்கு எதிராக மன்னார் நீதி மன்றத்தில் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது 9 ஆயிரத்து 500 மீனவ குடும்பங்கள் உள்ளன.

இதில் ஆண்களை தலைமைத்துவமாக கொண்ட 7000 மீனவ குடும்பங்களும் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட 2500 மீனவ குடும்பங்களும் அடங்குகின்றனர்.

இவர்களை நம்பி மன்னார் மாவட்டத்தில் 38 ஆயிரம் மீனவ குடும்ப உறவுகள் மீன் பிடி வருவாயை நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

எனவே பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்து வரும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு வடமாகாண அரசும்,மத்திய அரசும் உரிய தீர்வைப்பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவர் என்.எம்.ஆலம் மேலும் தெரிவித்தார்.

# சமுர்த்தி நிவாரண உதவி பாரபட்சம் காட்டுவதாக விசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரண உதவிகளில் பாரபட்சம் காட்டப்படுவதாக பாதிக்கப்படும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக்கிராமத்தில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் இம்மக்கள் வாழ்வாதார ரீதியாக கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சமுர்த்தி நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன.

எனினும் இந்நிவாரண உதவிகளிலும் பாரபட்சம் காட்டப்படுவது வயிற்றில் அடிக் கும் செயற்பாடாகும் என பாதிக்கப்படும் மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டவர்களுக்கு மீளவும் வழங்கப்படுவதாகவும் வறுமையில் கஷ்டப்படும் மக்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே நிவாரண உதவிகளை வழங்குவோர் பாரபட்சம் காட்டாது கஷ்டத்தை எதிர்நோக்கும் மக்களுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (69)

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

## மோடிக்கான வரவேற்பு நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார் மிஸ் அமெரிக்கா

பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 28ஆம் திகதி அமெரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அங்கு நடைபெறவுள்ள வரவேற்பு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவதற்காக மிஸ் அமெரிக்கா அழகிப் போட்டியில் வென்ற இந்திய வம்சாவளி அமெரிக்கர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 2014ஆம் ஆண்டு ஹமிஸ் அமெரிக்கா" போட்டியில் வெற்றி பெற்ற நினா தவுலுரி (வயது 25). முதல் இந்திய வம்சாவளிப் பெண் ஆவார். இவரும், பி.பி.எஸ். நியூஸ் ஹவர் தொலைக்காட்சியின் தொகுப்பாளர் ஹரி ஸ்ரீ நிவாசனும் மோடிக்கு அளிக்கப்படும் வரவேற்பு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்திய வரைபடத்திலிருந்து மறைந்துபோன "சடல் கிராமம்"

### 53 குடும்பங்களின் கதி என்ன?

காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் நிலச்சரிவு ஏற்பட்ட நிலையில் உதம்பூர் மாவட்டத்தில் சடல் என்ற கிராமம் காணாமற் போயுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது. இது உலகளாவிய ரீதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் அங்கு 53 குடும்பத்தினர் வசித்து வந்ததாக கூறப்படுகிறது.




காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பெரும பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 200 பேர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் தவித்த 1 இலட்சத்து 30 ஆயிரம் பேரை இராணுவத்தினரும், தேசிய பேரிடர் மீட்பு குழுவினரும் மீட்டு நிவாரண முகாம்களில் தங்க வைத்துள்ளனர். இன்னும் இலட்சக்கணக்கானோர் வெள்ளம் சூழ்ந்த பகுதியில் சிக்கி உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமன்றி அங்கிருந்த வீடுகள் மீது பெரிய பெரிய பாறைகளும் சகதிகளும் விழுந்து கிடப்பதால் அங்கு வசித்த ஒருவர் கூட உயிர்பிழைத்திருக்க முடியாது எனவும் அஞ்சப்படுகிறது.

அத்துடன் அங்கு பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் வெள்ளம் பாதித்த பகுதியில் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியாவின் எல்லைப் பிரச்சினைக்கு நடுநிலையான தீர்வு கிட்டும்

### சீனா உறுதியளிப்பு

இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் நடுநிலையான தீர்வு காணப்படும் என்று சீனா தெரிவித்துள்ளது.

சீன அதிபர் ஜி ஜின்பிங் எதிர்வரும் 17ஆம் திகதி. இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இந்நிலையில் சீன வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளர் "ஹவா சன்யிங் கூறியுள்ளதாவது:

எல்லையில் அமைதி நிலவ வேண்டும் என்பதில் இரு நாடுகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன. எனவே தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் எல்லைப் பிரச்சினைக்கு நடுநிலையான, சரியான தீர்வு எடடப்படும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையுள்ளது என்றார்.

எல்லைப் பகுதியில் வீதி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இந்தியா நடவடிக்கை எடுத்து வருவது பற்றி செய்தியாளர்கள் கேட்டபோது, அதற்கு பதிலளிக்க ஹுவா சன்யிங் மறுத்துவிட்டார். சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் 3 நாள் சுற்றுப பயணத்தின்போது எல்லைப் பிரச்சினை, தொழிற்துறை முதலீடு உள்ளிட்டவை குறித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி சீனா சென்ற இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், அந்நாட்டு அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்துப் பேசியுள்ளதுடன் இந்தியாவில் அதிபர் ஜி ஜின்பிங் பங்கேற்கவுள்ள முக்கிய நிகழ்ச்சிகள் தொடர்பாக சீன உயர் அதிகாரிகளிடம் அஜித் தோவல் ஆலோசனை நடத்தினார். ஆத்துடன் அதிபர் ஜி ஜின்பிங்கின் வருகையை இந்தியா ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.




## டில்லியில் பா.ஜ.க.ஆட்சி அமைக்க ஷீலா தீட்சித் "திடீர்" ஆதரவு

டில்லியில் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு காங்கிரஸ் மூத்த தலைவர் ஷீலா தீட்சித் திடீரென ஆதரவு தெரிவித்துள்ளார். இதனால் காங்கிரஸ் கட்சி பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளது. டில்லி சட்டசபை முடக்கி வைக்கப்பட்ட நிலையில் பாரதிய ஜனதாக்கட்சி மாற்று அரசு அமைக்க முயன்று வருகிறது. பிற கட்சிகளின் எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்க பா.ஜ.க பேரம் பேசி வருவதாக ஆம் ஆத்மி, காங்கிரஸ் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

## ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் 31 ஆயிரம் தீவிரவாதிகள்

### தாக்குதல் நடாத்த அரபு நாடுகள் ஒப்புதல்



(வாஷிங்டன்)

ஈராக் மற்றும் சிரியாவில் அரசுக்கு எதிராக போரிடும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் 31,500 தீவிரவாதிகள் உள்ளதாக அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவு அமைப்பு நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

இந்த தீவிரவாத அமைப்புக்கு எதிராக அமெரிக்கா நடத்தும் போருக்கு 10 அரபு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஈராக்கில் சன்னி பிரிவு முஸ்லிம்களின் ஆதரவுடன் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. பல நகரங்களில் அரசு படைகளை விரட்டியடித்து ஆக்கிரமித்துள்ளன.

அதுமட்டுமன்றி ஈராக் அரசு படைகளுக்கு ஆதரவாக அமெரிக்க இராணுவம் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் மீது வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதேபோல், சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கு எதிரான போராடடத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் புகுந்து, இரு தரப்பிலும் பலத்த சேதத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

## பூமிக்குத் திரும்பியுள்ளனர் ரஷ்ய-அமெரிக்க வீரர்கள்

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்களும் ஒரு அமெரிக்க விண்வெளி வீரரும் பூமிக்குத் திரும்பினர். சமீபமாக நடந்து வரும் உக்ரைன் பிரச்சினையால் ரஷ்யா -அமெரிக்கா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டு வருகிறது. அதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஸ்டீவன் ஸ்வான்சன், ரஷ்யாவின் அலெக்சாண்டர் ஸ்கோவோர்ட்ஸ் மற்றும் ஒலெக் அர்தம்யேவ் ஆகியோர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை பூமிக்குத் திரும்பினர்.

உக்ரைன் மீது ரஷ்யா மோதல் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்த பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் நாசா ரஷ்யாவுடனான விண்வெளி ஆய்வு முயற்சிகளைக் கைவிட்டது. தற்போது அங்கிருந்த விண்வெளி வீரர்கள் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் நிலையில், அந்த விண்வெளி நிலையத்தைப் பயன்படுத்துவதோ அல்லது புறக்கணிப்பதோ ரஷ்யாவின் கையிலேயே உள்ளது என்று நாசா தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி பிரிட்டிஷில் காஷ்மீர் பற்றி விவாதம்

இந்தியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் காஷ்மீர் குறித்த விவாதம் நடைபெற்றது. இதற்கு இந்தியாவில் கடும் கண்டனம் எழுந்துள்ளது. காஷ்மீரில் நிலவும் அரசியல் மற்றும் மனித உரிமைகள் நிலை என்ற தலைப்பில் நாடாளுமன்ற குழு அறையில் இந்த விவாதம் நடைபெற்றது:

விவாதத்தை முன்மொழிந்து பேசிய மக்கள் சபை எம்.பி டேவிட் வாட், உலக அமைதிக்கு காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்திர தீர்வு காணவேண்டியது அவசியம் என்றார். தீர்வு காணப்படாதவரை இந்தியா பாகிஸ்தான் இடையே எப்போது வேண்டுமானாலும் போர் மூளும் என்று அவர் கூறியதுடன் இதனை வெளிநாட்டு விவகாரம் என்று கூறிவிடமுடியாது என்று, அவர் குறிப்பிட்டார்.

ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் பிரிட்டன் தலையிடுவது எந்த வகையிலும் பயனளிக்காது என்று முன்னாள் அமைச்சர் பார்கர் கூறினார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எம்.பி. விரேந்திர ஷர்மா உள்ளிட்ட 13 எம்.பி.க்கள் விவாதத்தில் பங்கேற்றனர். காஷ்மீர் பிரச்சினை பிராந்திய மற்றும் சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கூறிய உறுப்பினர்கள், கஷ்மீர் மக்களுக்கு சுய நிர்ணைய உரிமை அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தினர். கடும் எதிர்ப்பையும் மீறி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் காஷ்மீர் பற்றி விவாதம் நடத்தப்பட்டிருப்பது இந்தியாவில் கண்டனத்திற்குள்ளாகி உள்ளது.

## புதிய ஏவுகணை சீனாவில் அறிமுகம்



இந்தியா உட்பட நான்கு நாடுகளுக்கு சீன அதிபர் ஜி ஜின்பிங் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் அதே சமயம் அது புதிய ஏவுகணை ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

"ஹாங்கி 10 என்று அழைக்கப்படும் இந்த ஏவுகணை, போர்க்கப்பல்களைத் தாக்க வரும் எதிரி நாட்டு ஏவுகணைகளை வான்வெளியில் இடைமறித்து அழிக்கும் திறன் கொண்டவையாகும். இந்தப் புதிய கருவியால், சுமார் 10 நொடிகளில் ஏவுகணைகளை எறிய முடியும். கடல் மட்டத்தில் இருந்து 1.5 முதல் 10 மீற்றர் உயரம் வரை இந்த ஏவுகணைகள் சீறிப்பாயும் என்று கூறப்பட்டுள்ளது.

# காரை - ஊர்காவற்துறை கடற்பாதை புனரமைக்கும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய ஊர்காவற்துறை - காரைநகர் கடல்மார்க்கத்துக்கான கடற்பாதையின் திருத்தப் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்துறை இறங்கு துறைக்கும் காரைநகர் இறங்கு துறைக்கும் இடையில் போக்குவரத்தை மேற்கொண்டு வந்த கடல்பாதை கடந்த சில நாட்களாக பாவனையில் ஈடுபடுத்த முடியாத வகையில் பகுதியளவில் சேதமடைந்திருந்தது,

இந்நிலையில் இதனை திருத்தம் செய்து தமது போக்குவரத்துக்கு வழிவகை செய்துதருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மக்கள் கோரிக்கையினை முன்வைத்திருந்தனர்.

கோரிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தி ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர், கடல் மார்க்கத்துக்கான இக்கடல் பாதையினை உடனடியாக திருத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

அமைச்சரின் பணிப்புரைக்கமைவாக இக்கடல்பாதையின் புனரமைப்புப் பணிகள் காரை நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காரைநகருக்கும் ஊர்காவற்துறைக்கும் இடையிலான கடல் மார்க்கத்தின் ஊடாக பயணிக்கும் இக்கடல்பாதையில் அரச உத்தியோகத்தர்கள், நீதிமன்றுக்கு செல்வோர் உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்காக பயணிப்போர் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நாளொன்றுக்கு ஐந்து தடவைகள் பயணிக்கும் இக்கடல் பாதையின் ஸ்தம்பிதத்தால் நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவோர் பாரிய நெருக்கடிகளை சந்தித்திருந்த நிலையில் இப் புனரமைப்புப் பணிகள் அமைச்சரின் பணிப்புரைக்கமைய துரிதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூரில் யோகா பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். யோக அரங்கத்தினர் நடாத்தும் மாலைநேர யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர்த் தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குரு பூசை மடத்தில் நாளை மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

யோகா வகுப்புக்கள் மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை ஒரு மணிநேரம் தொடர்ந்து 45 நாட்கள் தினமும் நடைபெறும். ஆரோக்கியத்திற்கு அவசியமான யோகாசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைப் பயிற்சிகள் முதன்மைப்படுத்தப்பட்டு அனுபவமுள்ள ஆசானால் நுட்பமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண் ஆசிரியரினால் மேலதிகமான பயிற்சிகள் வழங்கப்படும் பயிற்சி நெறியை பூர்த்தி செய்பவர்களுக்கு கையேடுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள அனைவரும் இப்பயிற்சிநெறியில் இணைந்து பயன்பெறமுடியும். அறிமுக நிகழ்விலும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று யாழ். யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# “ஆவா” குழுவிடம் கைக்குண்டு தொடர்கிறது புலன்விசாரணை

(யாழ்ப்பாணம்)

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட ஆவா குழுவினரிடமிருந்து கைக்குண்டு மீட்கப்பட்டமை தொடர்பில் கைக்குண்டு எவ்வாறு அவர்களுக்கு கிடைத்தது சம்பந்தமாக புலன்விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருவதாக யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே செய்தியாளரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த விடயம் சம்பந்தமாக ஒருவர் தொடர்ந்தும் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

# கடை உடைத்து திருட்டு; மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவில் தம்பாட்டி பகுதியில் உள்ள ப.நோ.கூ.சங்கக் கடை உடைத்து 16 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போன சம்பவம் தொடர்பில் மூவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருப்பதாக யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்தார்.

நாரந்தனையைச் சேர்ந்த இச் சந்தேகநபர்கள் உயர்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகத் தெரிவித்த அவர் கடந்த மாதம் 29 ஆம் திகதி இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதாக தெரிவித்தார். (பா)

# வாழ்வாதாரத்துக்கு ஊக்கம் மேலதிக உதவிக்கு ஏற்பாடு

வாழ்வாதார மேம்பாட்டுக்காக தென்னிலங்கையிலிருந்து மூலப்பொருளான எள்ளை பெற்றுத்தந்தமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பிரானபற்று எள்சார் உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் தமது நன்றியறிதலை தெரிவித்துக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு நேற்று வருகைதந்த மேற்படி சங்கப் பிரதிநிதிகள் தமது நன்றியறிதலை தெரிவித்தனர்.

இதன்போது பண்டத்தரிப்பு பிரான்பற்று எள்சார் உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தமது சங்கத்தின் ஊடாக எள்சார் தொழிற்துறைகளை மேம்படுத்தும் வகையில் தாம் எதிர்நோக்கும் மூலப் பொருள் கொள்வனவு தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு தெரியப்படுத்தினர்.

கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர் தொழிற்துறையாளர்களின் மூலப பொருளான எள்ளை தென்னிலங்கையிலிருந்து பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையினை தமது அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவியுடன் முன்னெடுத்து இருந்தார்.

அதற்கமைவாக குறித்த சங்கத்திற்கு முதற்கட்டமாக 2 ஆயிரம் கிலோ கிராம் எள்ளை அமைச்சர் வழங்கி வைத்தார்.

அத்துடன் சங்கத்திற்குத் தேவையான மேலதிக எள்ளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

## தங்கநகை...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன நேற்று தெரிவித்தார்.

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது, கடந்த வாரம் கோப்பாய் பொலிஸ் நிலைய பகுதியில் 203 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நகைகள் கொள்ளையடிப்பு சம்பவம் தொடர்பில் விசாரணை நடைபெறுகின்றதா என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் நகைகளை கொண்டு வரும் போது சுங்கத் திணைக்களத்திடம் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு இல்லாமல் நகைகளை கொண்டு வருபவர்கள் இங்கு நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பொய் முறைப்பாடுகள் பதிவு செய்கின்றார்கள்.

அந்தவகையில், சர்வதேச பொலிஸாரிடம் வினவிய போது, யாழ்ப்பாணத்தில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதென பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்து கொண்டு வெளிநாடுகளில், இன்சுரன்ஸ் பதிவு செய்வதற்காக முயற்சி செய்கின்றார்கள்.

அவ்வாறு பொய் முறைப்பாடு செய்பவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும், அந்த வகையில், நகை கொள்ளைச் சம்பவம் தொடர்பில் புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் யாழ். பிரதேச சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மேலும் கூறினார். (25)

## சுனாமியால்...

கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுனாமியாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரம் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கு முன்னுரிமையடிப்படையில் தீர்வு காணப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், சுயபொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் அரசினதும், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் மீள்குடியேற்றம், வாழ்வாதார உதவித் திட்டம், சுய தொழில் வாய்ப்பு உள்ளடங்கலான பல்வேறு செயற்றிட்டங்கள் அந்தந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில், கட்டைக்காடு ஜே/433 கிராமசேவையாளர் பிரிவில் தனியார் காணிகளில் வாழ்ந்து வரும் ஒருதொகுதி மக்கள் நிரந்தரக் காணிகள் இல்லாதநிலையில் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதை நான் நன்கறிவேன்.

அந்தவகையில் நீங்கள் எதிர்நோக்கி வரும் இக் காணிகள் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் கொழும்பிலுள்ள காரியாலயத்துடனும் துறைசார்ந்த அரச அதிகாரிகளுடனும் கலந்துரையாடி இம்மாத இறுதிக்குள் உரிய தீர்வு பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அதுமட்டுமன்றி நீங்கள் வாழும் பகுதிக்கு நேரில் விஜயம் மேற்கொண்டு இவ் விடயம் தொடர்பில் ஆராய்ந்தறிந்து குறித்த பிரச்சினை சாதகமாக பரிசீலித்து இறுதி தீர்வொன்றை எட்டுவதற்கு தயாராகவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண காணி ஆணையாளர் தயானந்தன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## பாப்பரசரின்...

கேட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை பாப்பரசரின் விஜயத்தை எவரும் அரசியலாக்கக் கூடாது என்றும் பேராயர் மல்கம் ரஞ்சித் கூறினார்.

இந்த விஜயத்தின் போது பாப்பரசர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மரியாதையின் நிமித்தம் சந்திப்பார் என்றும் அவர் மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் செய்வார் என்றும் திருச்சபை அறிவித்துள்ளது.

## இந்திய...

தேசிய புலனாய்வு முகவரகம் உள்நாட்டு அமைச்சின் அனுமதியைக் கோரியுள்ளது.

25 வயதான இலங்கை பிரஜையான அருண் செல்வராஜா ஹைதராபாத்தில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்கும் கம்பனி ஒன்றை நடத்தி வந்தார்.

இவர் சில மாதங்களாக தேடப்பட்டு வந்தார். கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்துடன் தொடர்பில் இருந்தார். காலப்போக்கில் அணு உலை விசாகப்பட்டினம் மற்றும் கொச்சியிலுள்ள கடற்படை தளங்கள், முகாம்களையும் நோட்டமிட அங்கு பல தடவை போயுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கொள்ளையர்...

புலிகளின் உறுப்பினர் கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து ஏனைய 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து மூன்று மோட்டார் சைக்கிள்கள், ஒரு முச்சக்கர வண்டி, சில தங்க ஆபரணங்களை கைப்பற்றியதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளைக் குழுவை வழிநடத்திய புனர்வாழ்வு பயிற்சியை பெறாத புலிகளின் உறுப்பினர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் ஏனையோர் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## சர்வதேச...

தயாராகவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை போன்றே அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு தயாராகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சர்வதேச கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் அவசியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந் தன் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயாரென 'இந்து' பத்திரிகைக்கு ஜனாதிபதி தெரிவித்திருந்த கருத்து தொடர்பில், இரா. சம்பந்தன் இந்தப் பதிலை அளித்துள்ளார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றபோதிலும், கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கு கால வரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின்போது இணக்கம் காணப்படுகின்ற விடயங்கள் குறித்து அனைவரும் அறிந்து கொள்வதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் இன்றியமையாதது எனவும் இரா. சம்பந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாட திறந்த மனதுடன் இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் செய்திகள் வெளியாகியிருந்தன.

பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13 'ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அரசியல் யாப்பிற்கு ஏற்புடையதாக அமுல்படுத்துவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாட தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 'இந்து'விற்கு தெரிவித்திருந்தார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரபட்சமற்ற சேவைகள்

## இதுவே எமது நோக்கம்




ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவினது சிறந்த தலைமைத்துவம் வழிநடத்தலுடன் பிரதேச ரீதியாக அலுவலகங்களைத் திறந்து மக்களுக்கான சேவைகளை திறம்பட ஆற்றி வருகின்றோம் என ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப்பாளரும், பனை அபிவிருத்திச் சபையின் தலைவருமான பசுபதி சீவரத்தினம் (கி.பி.) தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் புதிய அலுவலகத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 90களில் ஜனநாயகம் மறுக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவினது சிறந்த தலைமை, ஆலோசனை வழிநடத்தலுடன் வடக்கு கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் பிரதேச ரீதியாக அலுவலகங்களை திறந்து மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இவ்வாறான அலுவலகங்கள் ஊடாக மக்களின் கருத்து, பேச்சு நடமாட்டம், தொழில் சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

எமது கட்சியின் தலைவரின் தலைமையில் மாகாணசபையை நாம் வென்றெடுத்திருப்போமேயானால் யாழ்.மாவட்டம் மட்டுமல்லாது வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களையும் அபிவிருத்தியால் கட்டியெழுப்பி இருப்போம்.

அதுமட்டுமன்றி எமது மக்களின் அபிலாஷைகளின் பெரும்பாலானவற்றையும் வென்றெடுத்திருப்போம்.

வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் நாடளாவிய ரீதியிலும் அபிவிருத்தி மட்டுமல்லாது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பிரதேச அலுவலகங்களைத் திறந்து அவற்றின் ஊடாக எமது சேவைகளை எமது தலைவர் ஊடாக சிறந்த திட்டமிடலுடன் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

ஆனாலும், இனவாதத்தையும், எதிர்ப்பரசியலையும் பேசி மக்களது வாக்குகளை பெற்றுக் கொண்ட சுயலாப அரசியல்வாதிகளால் மக்களுக்கு ஒருபோதும் எவ்விதமான அபிவிருத்திகளையோ, வாழ்வாதாரத்தையோ பெற்றுக் கொடுக்க முடியாது என்பதை திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமன்றி எதிர்காலத்திலும் இச்சுயலாப அரசியல்வாதிகளால் மக்களுக்கு எவ்விதமான பயன்களும் கிடைக்கப் போவதில்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், ஈ.பி.டி.பி.யின் தெல்லிப்பளை இணைப்பாளர் ஜெயபாலசிங்கம் (அன்பு) உள்ளிட்ட கட்சியின் பிரதேச இணைப்பாளர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உள்ளடங்கலான பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச முதியோர் தின பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலான முதியோர் பொது அறிவு வினாடி வினாப் போட்டிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து சங்கானை பிரதேச செயலக அணியும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கரைச்சி பிரதேச செயலக முதியோர் அணியும் இந்த தேசிய மட்டப் போட்டிகளுக்கு செல்கின்றன.

எதிர்வரும் 23.09.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்பு பத்திரமுல்லையிலுள்ள செத்சிறிபாய கட்டடத்தில் நடைபெற உள்ளதாக முதியோர் தேசிய செயலகத்தின் பணிப்பாளர் சுவிந்த எஸ்.சிங்கப்புலி தெரிவித்துள்ளார்.

மாவட்டங்கள் தோறும் பிரதேச செயலர் பிரிவுகளில் முதியோர் சங்கங்களுக்கிடையே முதற்கட்டப் போட்டிகள் யூலை மாதத்தில் நடைபெற்றது. பின்பு பிரதேச செயலர் பிரிவுகளில் முதலிடத்தைப் பெற்ற அணிகள் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றின. அதில் முதல் இடத்தைப் பெற்ற அணிகள் முதியோர் தேசிய செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவ்வாறு தெரிவு செய்து அனுப்பி வைக்கப்பட்ட அணிகளுக்கிடையே இந்த போட்டி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து சங்கானை பிரதேச செயலக அணியும், கிளிநொச்சிமாவட்டத்திலிருந்து கரைச்சி பிரதேச செயலக முதியோர் அணியும் இந்த தேசிய மட்டப் போட்டிகளுக்கு செல்கின்றன.

இம் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ள முதியோர் வினாடி வினாப் போட்டிகள் முதியோரின் ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்குடன் தொடர்ந்தும் நடத்தப்பட உள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார. (90)

# தேர்தல் வன்முறை; ஊவாவில் 42 பேர் கைது

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தல் சட்ட மீறல்களுடன் தொடர்புடைய 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து 63 சம்பவங்கள் பொலிஸாருக்குப் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவிக்கின்றார்.

இவற்றுள் 46 சம்பவங்கள் மொனராகலை மாவட்டத்திலும், ஏனையவை பதுளை மாவட்டத்திலும் பதிவாகியுயள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு வேட்பாளர்களும் அடங்கியுள்ளனர்.

இதேவேளை, ஊவா மாகாணத்தின் பாதுகாப்பிற்காக நானாயிரத்து 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஏற்கனவே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# வீதி விபத்தில் ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கரவண்டி மோதியதால் ஏற்பட்ட விபத்தில், கர்ப்பிணி பெண் உட்பட ஐவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் கூறினார்கள்.

படுகாயமடைந்தவர்கள் சுயநினைவிழந்த நிலையில் இருப்பதாகவும் அதன் காரணமாக, அவர்களின் பெயர் விபரங்கள் இதுவரை தெரியவில்லை என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து தொடர்பில் தெரியவருவதாவது,

பலாலி வீதியில் துவிச்சக்கர வண்டியில் ஏறமுற்பட்டவர் மீது, வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளதுடன் அந்த துவிச்சக்கர வண்டி வீதியில் சென்ற மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

இதனையடுத்து, மோட்டார் சைக்கிள், மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் பயணித்த கர்ப்பிணி பெண் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (25)

# வீதி புனரமைப்பு கோரி மக்கள் திரண்டு போராட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, வட்டக்கச்சி மாவடியம்மன் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட விநாயகர் வீதியை புனரமைத்து தருமாறும், குறித்த பகுதிக்கு மின்சாரம் பெற்றுத்தருமாறும் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டம் விநாயகர் வீதியை மறித்து நேற்றுக் காலை 11.00 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வீதியினூடாக மழை காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதாகவும், தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய குறித்த பாதையையே அதிகளவில் பயன்படுத்துவதாகவும் கூறிய அப்பகுதி மக்கள், பல அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் எவ்வித பலனும் எட்டவில்லை எனக் கூறுகின்றனர்.

எதிர்வரும் காலங்களில் மழை காலமாகையால் தமது அத்தியாவசிய தேவையான குறித்த பாதையை புனரமைப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். தேர்தல் காலங்களில் பல்வேறு ஆசை வார்த்தைகளைக் கூறிய அரசியல் தலைமைகள் இன்றுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனக் கூறுகின்றனர்.

குறித்த விடயம் அடங்கலான மகஜர் ஒன்றை அப்பகுதி கிராம அலுவலர் ஊடாக மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கினர்.

தேர்தல் கால வாக்குறுதிகள் எங்கே? வாக்களித்த முன்பும் இருட்டில், பின்பும் இருட்டில் என பல்வேறு சுலோகங்களையும் தாங்கி அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் (29)

# ஆசிய மனித உரிமை மாநாடு; தொண்டு நிறுவனங்களுக்கு தடை

## 'கார்டியன் அவுஸ்ரேலியா' தகவல்

அவுஸ்ரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள ஆசிய மனித உரிமை மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இலங்கையில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புக்கள் இரண்டுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த அமைப்புகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அந்த மாநாட்டிலிருந்து விலகப்போவதாக எச்சரித்துள்ளன.

சிட்னி பல்கலைக்கழகமே இவ்வாறு இலங்கை அரசசார்பற்ற அமைப்புகளுக்கு இடமளிக்க மறுத்துள்ளது.

குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொள்கின்ற இலங்கை பாதுகாப்பு படை பிரதிநிகள் குழு இலங்கையிலிருந்து எந்த அரசசார்பற்ற அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கவேண்டாம் என மாநாட்டு ஏற்பாட்டாளர்களை கேட்டுக்கொண்டனர் என 'கார்டியன் அவுஸ்திரேலியா' தெரிவித்துள்ளது.

எனினும் இரண்டு அரசசார்பற்ற அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கத் தீர்மானித்த ஏற்பாட்டாளர்கள் பின்னர் அதனையும் இரத்துச்செய்துள்ளனர்.

இந்த மாநாட்டில் இலங்கை இராணுவத்தினர் பலர் உரை நிகழ்த்தவுள்ளனர் என 'கார்டியன் அவுஸ்திரேலியா' தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரிட்டனைச் சேர்ந்த இலங்கையின் சமாதானத்திற்கும் நீதிக்குமான பிரசார அமைப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டாமென ஏனைய அமைப்புகளையும் கோரியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையும் இரண்டு இலங்கை அரசசார்பற்ற அமைப்புகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்துள்ளது.

# டெங்கு நோயாளர்கள் 36 பேர் 12 நாட்களில் அனுமதி

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட 36 பேர் கடந்த இரண்டு நாட்களில் அனுமதிக்கப்பட்ட அதே வேளை, நேற்று மட்டும் அறுவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ்வவைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து மூன்று பேரும், யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து மூன்று பேருமாக இந்த ஆறு பேரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு டெங்கு நுள்ம்பு போன்றவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.